கல்வாரிப் பாதையில்...நீ!



G.B. Sathyanesan, B.A.

சாலமோன் பதிப்பகம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கல்வாரிப் பாதையில்...
நீ!

கல்வாரித் தியானங்களும்
இரத்தச் சாட்சிகளின் வரலாறும்

J. சாம் ஜெயத்துரை M. A.,

தயவு செய்து இதன் விலையான ரூ 3/- யை
அனுப்பி புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள்

வெளியிடுபவர்:
J. சாம் ஜெயத்துரை
50, ரயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை: ரூ. 3-00

ஆசிரியரின் பிற நூல்கள்:-

1.	என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே	ரூ 3-00
2.	கிறிஸ்துவின் இரத்தம்.	ரூ 3-00
3.	ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து!	ரூ 3-00
4.	கல்வாரிப் பாதையில் நீ!	ரூ 3-00
5.	எழுப்புதல் எப்பொழுது?	ரூ 3-00
6.	பலியின் உடன்படிக்கை	ரூ 3-00

அச்சிட்டோர்:

பிரபு பிரிண்டிங் ஹவுஸ்,
18, வடக்கு உஸ்மான் சாலை,
தி. நகர், சென்னை-600 017.

சமர்ப்பணம்

என் அடைக்கலமும், என் தேவனுமான இயேசு ராஜா! அழகிய ஆலயத்தை உமக்கென்று சால மோன் கட்டி, தனது இதயத்தின் அன்பினை உலகுக்குப் பறை சாற்றினுர்! கீழ்த்திசை சாஸ்திரி கள் அரியதான காணிக்கைகளை உம் 'பிஞ்சு'க் கரங்களில் ஈந்திட்டனர்! மகிழ்ந்திட்டனர்! நான் உம்மைத் தெரிந்து கொள்ளாத நேரத்தில் நீர் என்னைக் கண்டு, மார்போடணைத்து உம் உயிரை யும் ஈந்திட்டீர்! எம்பெருமாஞகிய உமக்குக் காணிக்கையொன்று படைத்திட அறிந்திலன் நான்! குறுமதி கொண்டெழுதிட்ட இச்சிறு நூலினை மிக மிகத் தாழ்மையோடு உம் அழகிய பாதத்தில் காணிக்கையாக்குகிறேன்!

உம் குருசே, இனி என் பாக்கியம்!

ஆசீர்வதித்தருள்க! ஆமென்!!

பொருளடக்கம்

		பக்கம்
1.	கல்வாரிப் பாதையில்....நீ!	5
2.	இக்காலத்துப் பாடுகளும் இனிவரும் மகிமையும்	10
3.	கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து...	13
4.	பாதைக்கு வெளிச்சம் வேதமே!	18
5.	கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யார்?	25
6.	குதிரைகளோடு எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?	28
7.	பாதையில் பொருத்தனைகள்	32
8.	கண்ணீரின் பாதையில்... ஓர் சாட்சி!	35
9.	திறப்பின் வாசலில்... நீ!	44
10.	கல்யாண விருந்தும் கல்வாரியும்	50
11.	கல்வாரிப் பாதையில் நிக்கொதேமு!	54
12.	மூளையைக் கலக்கி சலவை செய்பவர்கள்	59
13.	சிலுவையை நோக்கி இராஜ நடை	64
14.	கல்வாரிப் பாதையில் சாது சுந்தர் சிங்	70
15.	கல்வாரிப் பாதையில்.... சீஷர்கள்	74
16.	கடைசியாக, என் சகோதரரே...	81

அத்தியாயம் 1

கல்வாரிப் பாதையில்... நீ!

அது ஒரு பிரிவு உபசார— பிரியாவிடைவிழா! (farewell party). நீண்ட நாட்கள் தங்களுடன் தங்கியிருந்த உறவினருக்கோ, மேல் அதிகாரிகளுக்கோ வழியனுப்பும் வேளை ஆனந்தமாக மாலையணிவித்து, அவர் செய்த அரிய பெரிய காரியங்களைப் பேசி, உற்சாகப்படுத்தி, அனுப்புவது உலகத்தில் தொன்றுதொட்டு நடந்துவரும் ஓர் பழக்கமாகும். அதிகாரிகளின் அந்தஸ்துக்குத் தகுந்தபடி, அன்பின் இணைப்பின்படி பிரிவு உபசாரமும் மேன்மையுறும்.

ஏறத்தாழ முப்பத்து மூன்றரை ஆண்டுகளாக பூமியில் வாழ்ந்த தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு வழியனுப்பு விழா நடந்ததை நீ உன் மனக்கண் முன்னால் நிறுத்தியிருக்கிறாயா?

மனதுருக்கம் கொண்டவர் அவர்! அன்பின் சொரூபி! நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தவர்! தேவனுடைய செல்லப்பிள்ளையாக— நித்தமும் தேவனுடைய மனமகிழ்ச்சியாயிருந்தவர்— தேவதூதர்களால் பாடி ஆடி ஆராதிக்கப்பட்டவர்— நம்மீது வைத்த அளவில்லா அன்பின் நிமித்தமாக— நம்மைத் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்கும்படியாக மனிதனாக இறங்கி வந்தார்!

இயேசுவின் அன்பு எவ்வளவு பெரிய அன்பு! எவ்வளவு மனதுருக்கம்...! ஆறுதலான அறிவுரைகள்! ஆயிரம் ஆயிரம்

தாய் இனத்தின் அன்பினைந் சேர்த்துக் குவித்தாலும் ஆத்தும நேசராம் இயேசுவின் நீடிய அன்புக்கு இணையாகுமா?

பாவக்கட்டுகளிலிருந்தும், வியாதியின் கூறுகளி லிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் மக்களை விடுவித்தார். பாவமில்லாமல் ஜீவித்தார்! முழு உலகமும் பின்பற்றக் கூடிய முன்மாதிரியான வாழ்க்கையை— பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து காண்பித்தார்.

அவரது கனிவான பார்வை ஒன்றுக்கு முழு உலகமும் ஈடாகாது! மனித குலத்தின் மீட்புக்காக இறங்கிவந்து பூமி யில் வாழ்ந்த தேவகுமாரனுக்கு நமது சார்பில், அன்று வாழ்ந்த மக்கள் எப்படி வழியனுப்பு விழா நடத்தினர்கள் தெரியுமா?

"அவர் வஸ்திரங்களைக் சுழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒருமுடியைப்பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு 'யூதருடைய ராஜாவே, வாழ்க' என்று அவரைப் பரியாசம் பண்ணி, அவர் மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்"

ஐயோ! முள் முடியானது எவ்வளவு ஆழமாக அவரது தலையில் இறங்கியிருந்திருக்கும்! கூர்மையாகக் குத்தப்பட்ட இடங்களிலிருந்து எவ்வளவு இரத்தம் ஒழுகியிருந்திருக்கும்! அவரது தலையில் கோலால் அடித்த வேளையில் அவர் எவ்வள வாக துடிதுடித்திருப்பார்!

அழகின் சொரூபியான தேவகுமாரனின் முகம் அலங் கோலமாக மாற்றப்பட்டது! இதையெல்லாம் சகித்து அவருக்குப் பழக்கமில்லையே! ஏகசுதனும், ஒரே பேரான குமாரன் அல்லவோ அவர்!

ஆனாலும் நம்மீது வைத்த அன்பினல் எல்லா வேதனை களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். நமது பாவங் களையும், சாபங்களையும் பொறுமையாய்ச் சுமந்தார்!

முள்களின் வழியாக, தலையிலிருந்து முகத்தில் வழிந்து வருவது இரத்தமல்ல! அன்பு! தூய்மையான அன்பு! என் நேசரின் அன்பு!

சவுக்கடிகளால் முதுகெல்லாம் பிறப்பட்டு காயங்களாக தோன்றுகிறதே அந்தப் பிளவுகளெல்லாம் நம்மோடு செய்த உடன்படிக்கை! நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ண அவர்மீது வந்த ஆக்கினைகள்!!

சுட்டெரிக்கும் வெயிலில், பாரமான சிலுவையைத் தூக்கிக் கொண்டு எருசலேம் வீதிவழியாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்.

“இயேசு ராஜா! எப்படி இதையெல்லாம் நீர் சகித்தீர்! என்மீது அவ்வளவு அன்பு வைத்தீரோ ஐயா! என்மீது வைத்த தாகத்தினால் நீர் தாகமானீரோ’ உமது தோள்கள் புண்ணாக மாறியதோ?” என்று நீ கேட்கலாம்!

இயேசு கிறிஸ்து வாழ்ந்த நாட்களில் நான் வாழ்ந்திருப் பேனாகில் இதை ஒருநாளும் நான் சகித்திருக்கமாட்டேன்; அவருடைய உடலை சவுக்கடிகளால் பிளக்கும்படி நான் அனுமதித்திருக்கமாட்டேன்; அவர் சிலுவை சுமக்கிற வேளை யிலே நான் ஓடிப்போய் அவருக்காக நான் சுமந்திருப்பேன்; அவருக்காக நான் ஜீவனைக் கொடுத்திருப்பேன்” என்று நீ ஒருவேளை சொல்லலாம்.

ஆனால் எத்தனை வேளைகளில் உன் பாவச் செய்கை களினால் நீ அவரை வேதனைப்படுத்தியிருக்கிறாய்! இயேசு கிறிஸ்துவின் முகத்தில் கரி பூசிய வண்ணமாக அவரைச் சினிமா சாலையின் வெளியே நிறுத்திவிட்டு எத்தனை முறை நீ மட்டும் சினிமா பார்க்கச் சென்றிருக்கிறாய்!

எத்தனை எத்தனை முறை வீண் வார்த்தைகளினால் பரிசுத் தாவியானவரைத் துக்கப்படுத்தியிருக்கிறாய்!! கல்வாரியில் ஊற்றப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உன்னைக்

கழுவும்படியாகக் காத்துக் கொண்டிருக்கிறது. இயேசு வண்டை வா. அவர் உன்னை விசுவாச வீரனாக, உயிருள்ள சாட்சியாக மாற்றுவார்! அல்லேலூயா!

“இயேசு கிறிஸ்து மரணபரியந்தம், அதாவது சிலுவை யின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில், வானோர், பூதலத் தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங் கும்படிக்கும்...எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” பிலிப். 2:6-12. இயேசு கிறிஸ்துவோடு பாடனுபவித்தால், அவரோடுகூட அரசாள லாம். கிறிஸ்துவமதம் உல்லாசமான மார்க்கமல்ல! அது ரோஜா மெத்தையல்ல; ஆடம்பரமான ஜீவியம் அல்ல!

இயேசு கிறிஸ்து உன்னை அழைக்கிறார்! “ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின் பற்றக்கடவன்” (மாற். 8,34)

அவர் சிலுவையை எடுத்துக்கொண்டு நடந்த சிலுவைப் பாதை இன்னும் நீண்டு கொண்டே வருகிறது.

இயேசுவின் சீஷர்கள் அவரது அடிச்சுவடுகளைப் பின் பற்றினார்கள். கிறிஸ்துவுக்காக ஜீவனைக் கொடுப்பதை தங்களுக்குப் பெரிய மேன்மையாகக் கருதினார்கள்; அநேக மாக எல்லோரும் இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சுமந்து சென்று தங்கள் இரத்தத்தை பல நாடுகளில் ஊற்றினார்கள். அநேகரை நீதிக்குட்படுத்தினார்கள்.

இன்றும்கூட கம்யூனிஸ்ட் நாடுகளில் அநேகர் இயேசு கிறிஸ்துவின்மேல் வைத்த அன்பினால் தங்கள் ஜீவனைத் தியாக பலியாக வார்த்திருக்கிறார்கள்.

அவர்களின் சரித்திரமே உன் முன் இன்று வைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவை அழியாத அன்புடன் சேவித்து, மரித்து அவரது ராஜ்யத்தில் மகிமையோடு பிரவேசித்த பரிசுத்தவான்கள் உன்னையும் இந்தப் பாதையில் கடந்து வரும்படி அழைக்கிறார்கள்.

உன் சரீரம் கொஞ்ச நாள் இந்த உலகத்தில் நடமாடித் திரியும். அதில் கிறிஸ்து உனக்கென்று குடும்பத்தையும், நண்பர்களையும், உறவினரையும் கொடுத்திருக்கிறார்! உனது ஆவி உனது சரீரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் போது உலகத்தில் நீ உலவிக் கொண்டிருக்கிறாய்! ஆனால் ஒரு நாள் ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்பும். சரீரம் மண்ணுக்கு மண்ணாகும். அப்பொழுது உன் ஆத்துமாவின் கதி என்ன? இயேசு கிறிஸ்துவை மகிழ்ச்சியோடு சந்திப்பாயா? ஆயிரமான ஆத்துமாக்களோடு அவரது சமூகத்துக்கு வருவாயா? அல்லது வெறுங்கையோடு வெட்கத்தோடு நிற்பாயா?

இந்த சரீரத்திலிருந்து ஆவி பிரிக்கப்படும்முன்பு இயேசு கிறிஸ்துவுக்காக எவ்வளவு காரியங்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து விடு! வயிற்றுப் பிழைப்புக்காக அலுவலகத்திற்குச் செல்லும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களையெல்லாம் கிறிஸ்துவுக்காகச் செலவிடு.

அந்தரங்கத்தில் தேவனோடு இருதயத்தைக் கிழித்து ஜெபம் பண்ணு; ஆத்துமாவின் போஜனமாகிய வேத வசனத்தை வாஞ்சையோடு படி. மற்ற நேரங்களில் முழு பலத்தோடு இயேசு கிறிஸ்துவில் அன்பு கூர்ந்து அவரது ஊழியத்தைச் செய்! கல்வாரிப் பாதையில் சிலுவையைப் பார்த்தபடி தைரியமாக நடந்து முன்னேறு; இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை உன்னில் கிரியை செய்வதாக! ஆமென்!!

அத்தியாயம் 2

இக்காலத்துப் பாடுகளும் இனிவரும் மகிமையும்

ரோமர்கள் அரசாட்சி செய்த காலம் அது! ஓர் ரோமப் பேரரசன் தன்னைத் தானே கடவுள் என்றும், அனைவரும் அவனையே ஆராதனை செய்து பலி செலுத்தவேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

மீறுபவர்களுக்குக் கடுந் தண்டனை காத்திருந்தது! ஆனால் அந்த சாம்ராஜ்யத்திலுள்ள நாற்பது கிறிஸ்துவ அதிகாரிகள் அந்த கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டனர்!

விளைவு? கைகளிலே பளுவான இரும்புச் சங்கிலி, விலங்குகள் பூட்டப்பட்டன; நிர்வாணமாக்கப்பட்டு சவுக்கினால் அடிக்கப்பட்டனர்.

இந்த நாற்பது கிறிஸ்தவர்களுக்கும் புத்தி புகட்டவும், பாடம் கற்பிக்கவும் ஓர் விசேஷ மந்திரி நியமிக்கப்பட்டார். அந்த மந்திரி, கிறிஸ்தவர்களை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று உறைந்த பனிக்கட்டியின் மீது வரிசையாக நிறுத்தி வைத்தார்.

மந்திரியின் அருகே குளிர்காயும்படி தீ மூட்டப்பட்டு இருந்தது. மந்திரி கிறிஸ்தவர்களைப் பார்த்து, "நீங்கள் மரணமடையும் வரை அந்த பனிக்கட்டியின் மீது நின்று துடி

துடித்துச் சாகும்படியாக உங்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் யாராவது இயேசு கிறிஸ்துவை மறுதலித்து விட்டு, இனி நான் கிறிஸ்துவ மதத்திலிருப்பதில்லை என்று சத்தியம் செய்தால் அவர்களை உடனே விடுதலையாக்கி குளிர்காயும்படி செய்து வீட்டிற்கு அனுப்புவோம்'' என்று சொன்னார்.

நாற்பது கிறிஸ்தவர்களும் அமைதியாகப்பனிக்கட்டியின் மீது நின்று கொண்டிருந்தனர். மாலை நேரம் நழுவிக் கொண்டிருந்தது. இருள் எங்கும் சூழ்ந்துவிட்டது. ஆனால் அவர்களோ தங்கள் விசுவாசத்தில் தளரவில்லை. ''நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்'' (1 தீமோ 1. 12) என்று அவர்கள் இருதயம் மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருந்தது.

வினாடிகள் உருண்டன. நிமிடங்கள் நகர்ந்தன. குளிரினால் உடல் நடுங்க ஆரம்பித்தது. கால்கள் மரத்துப் போய் பனிக்கட்டியில் விழுந்தனர். இரத்தம் உறைந்துவிடும் நிலை வந்தது. மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தனர். தங்களின் அழகுக் குழந்தைகள், அன்பு மனைவி, நண்பர்கள் யாவரையும் அவர்கள் இனி காணப்போவதில்லை!

மந்திரி மாறி மாறி தனது அறிவிப்பைச சொல்லிக் கொண்டேயிருந்தார். 'கிறிஸ்துவை மறுதலித்தால் விடுதலை' என்று ஆசைக் காட்டிக் கொண்டேயிருந்தார், திடீரென்று அதில் ஒருவர் மறுதலித்தார்; விடுதலையாக்கப்பட்டார். வீடு சென்றார்.

மற்ற 39 பேரின் கடைசி நிமிடம் வந்தது. மந்திரி அவர்களை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். கிறிஸ்துவின் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தால் இவர்கள் தங்கள் ஜீவனையும் பொருட்படுத்தாமல் உறுதியாய் நிற்கிறார்கள் என்று எண்ணினான். மந்திரி திடீரென்று ஆகாயத்தைப் பார்த்தபோது, இதோ நாற்பது பிரகாசமான

தேவதூதர்கள் தங்களது கைகளிலே வெண்வஸ்திரங்களையும் நாற்பது ஜீவ கிரீடங்களையும் ஏந்திக்கொண்டு வேகமாக அந்த இடத்தை நோக்கிப் பறந்துவந்து கொண்டிருந்தனர்.

ஆனால் ஒரு தேவ தூதனின் முகம் துக்கமாயிருந்தது. ஒருவன் மறுதலித்ததின் விளைவாக, அந்தக் கிரீடத்தை கைகளிலே ஏந்திக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் வேதனையோடு நின்று விட்டான்.

இதை மந்திரிகண்ணுற்றபோது, மிகப் பெரிய இரகசியம் அவனுக்கு விளங்கிற்று. கிறிஸ்தவர்கள் ஏன் இரத்த சாட்சியாக மரிக்கிறார்கள் என்றும், ஏன் உறுதியாக நிற்கிறார்கள் என்றும் புரிந்துகொண்டான். உடனே தனது வஸ்திரங்களை எறிந்து விட்டு, பனிக்கட்டின் மீது ஓடி நின்று மிகுந்த சத்தியமாய், "நான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறேன். இந்தப் பாடுகள் இனிவரும் மகிமைக்கும் வெண் வஸ்திரத்திக்கும் கிரீடத்திற்கும் ஒப்பானவைகள் அல்ல; என்று சொல்லி தனது ஜீவனை கிறிஸ்துவுக்காகக் கொடுத்தான். மகிமையான சாட்சியானான். மரித்தும் இன்னும் பேசுகிறான்.

"இதோ சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடி உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு" (வெளி. 3. 11).

"நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்போது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி 2: 10).

அத்தியாயம் 3

கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து...

யோ 12: 24

கோதுமை மணியானது தேவனுடைய பிள்ளைகளுக்கும், பதரானது துன்மார்க்கருக்கும் ஒப்புமையாகும்.

"கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்று யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தான். மத்தேயு3:12.

நீ பதர் அல்ல; கோதுமை மணிதான்! ஆனால்—

கோதுமை மணியாக இருந்து விட்டால் போதுமா? இல்லை! அது நிலத்தில் விழுந்து சாகவேண்டும்; அப்பொழுது தான் மிகுந்த பலனைக் கொடுக்கும்!

மறுபடியும் பிறந்த அனுபத்தோடு நிறுத்திவிட வேண்டாம்; சுவிசேஷ ஊழியத்திற்காக, ஆத்தும அறுவடைப் பணிக்காக உன் ஜீவனை பலிபீடத்தின் மேல் வைப்பாயாக! அநேக நாட்களுக்குப் பின்பு அதன் பலனைக் காண்பாய்!

கோதுமை மணி சாகாவிட்டால் தனித்திருக்கும்!

நாய் பெற்ற தேங்காயைத் தானும் உண்ணாது! அது மற்றவர்களுக்கும் பயன்படாது! உன் இரட்சிப்பு வீணாக வேண்டாம்! கர்த்தர் உன்னிடத்தில் கனியை எதிர்பார்க்கிறார்;

கோதுமை மணி மண்ணில் விழுகிற நேரத்தில் அதன் உருவம் சிதைகிறது; அதன் மேன்மை உடைகிறது. ஆனால் அதிலிருந்து சிறிய வேரானது நிலத்தில் இறங்குகிறது. வேர் எவ்வளவாக கீழே நிலத்தில் இறங்குகிறதோ அவ்வளவாக செடி செழித்து வளரும்! நிலம் கிறிஸ்து, வேர் அந்தரங்க ஜெப ஜீவியம், நிலத்திலிருந்து உறிஞ்சும் சாறு, பரிசுத்தாவியானவர். உன் வேரானது கிறிஸ்துவில் இறங்கும் போது, உன் ஜெப ஜீவியத்தில் இயேசுவோடு நடக்கும் போது, நீ உள்ளான மனுஷனில் பலப்படுவாய்!

விளக்குப் பிரகாசம் கொடுக்க வேண்டுமானால், அதில் உள்ள திரி எண்ணெயில் மூழ்கியிருக்க வேண்டும். உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் நீபிரகாசிக்க வேண்டுமானால்உன் ஆத்துமா கிறிஸ்துவில் மறைந்து, இடை விடாத ஜெபம் ஏறெடுக்கப் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

கோதுமை மணி சாகும்போது, உன் சுயம் சுட்டெரிக்கப் படும்போது, உனது பெருமைகள் தகர்க்கப்படும் போது, உனது சித்தம் மறையும் போது, கிறிஸ்து உன்னில் மிகுந்த பலனைக் கட்டளையிடுவார்!

மெழுகுவர்த்தி தன்னை எரிக்கப்பட கொடுத்து உருகி அழியும்போது மிகுந்த பிரகாசத்தைக் கொடுக்கவில்லையா?

ஒரு அணுவானது தன்னை அழிக்கும்படி ஒப்புக் கொடுக்கும்போது அளவில்லாத அணுசக்தியும், மின்சாரமும், வெப்பமும் உண்டாவதில்லையா?

நீ உன் ஜீவியத்தை சுவிசேஷ சேவைக்காக ஒப்புக் கொடுக்கும் போது கர்த்தர் ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாகத் தருவார்! உன் வாழ்க்கையை ஆசீர்வாதமாக அநேகருடைய தாகம் தீர்க்கும் வாழ்க்கையாக கர்த்தர் மாற்றுவார்,

அழிவுள்ளதாய் விதைக்கப்படும்; அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும்; மகிமை

யுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும்; பலமுள்ளதாய் எழுந்திருக்கும், 1கொரி, 15;43to45

ருமானிய நாட்டிலே ஓர் சிறிய கிராமம் இருந்தது. இயற்கைச் சூழ்நிலையில் ஊரின் மத்தியில் ஓர் கிறிஸ்தவ ஆலயம். கிராமத்து மக்கள் ஞாயிறு காலை ஆராதனைக்காக அமைதியாக அங்கே கூடினார்கள். ஆராதனையும் ஆரம்பமாயிற்று. கிறிஸ்துவைப் பற்றியும், சிலுவையைப் பற்றியும் அருமையான பாடல்களை பக்தி பரவசத்தோடு பாடிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று கம்யூனிஸ்ட் போர்வீரர்களின் பூட்சுகள் அந்த ஆலயத்தைச் சூழ்ந்து கொண்டன! இராணுவ லாரிகள் ஆலயத்தின் வாசலில் வந்து நின்றன. கிறிஸ்தவர்களை வெறுத்து, துன்புறுத்தி, சித்திரவதை செய்யும் போர் வீரர்கள் ஆலயத்தை வளைத்துக் கொண்டார்கள்,

காப்டன் ஆலயத்திற்குள் நுழைந்தான்; நேராக ஆல்ட்டரிலுள்ள வேத புத்தகத்தை எடுத்து, அதை விரித்தபடியே வீசி எறிந்தான். அது ஆலயத்தின் வாசலிலே திறந்தபடி வந்து விழுந்தது.

ஆலயத்தில் உட்கார்ந்திருந்த அனைவரின் முகத்திலும் பயமும், வேதனை நடுக்கமும் நிறைந்திருந்தது. தங்களுடைய கதி என்னவாகுமோ என்று கலங்கிக் கொண்டிருந்தார்கள்,

"யார் யாருக்கு உயிர் மேல் ஆசையோ, யார் யார் தங்கள் குழந்தைகளை உயிரோடு பார்க்க வேண்டுமோ அவர்கள் வெளியே போகலாம்; ஆனால் போவதற்கு முன்னால் வாசற்படியிலே கிடக்கும் வேத புத்தகத்தின் மீது காறித் துப்பிவிட்டுப் போகவேண்டும்" என்று காப்டன் கர்ச்சித்தான்.

மயான அமைதி! ஒரு சில வினாடிகள் உருண்டன! பயத்துடன் ஒருவர் எழுந்து வேதாகமத்தில் துப்பிவிட்டு வெளி

யேறினுர். வீடு சென்றுர். மற்றவர் ஒருவர் பின் ஒருவராக துப்ப ஆரம்பித்தனர்.

ஒரு வாலிப சகோதரியால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லே. வேகமாக எழுந்து வாசலே நோக்கி நடந்து சென்ருள். வேதாகமத்தை எடுத்து கைகளில் அணைத்து, தனது முகத்திஞல் அதன் மேல் படிந்திருந்த எச்சில்களைத் துடைத்து, "என் ஆத்மநேசர் எனக்காக எழுதிக் கொடுத்த பொக்கிஷமல்லவா? இது எனக்காக ஜீவனைக் கொடுத்தவரின் அன்புக் கடிதமல்லவா?" என்று கூறி முத்தமிட்டாள்.

அவள் முழங்காலில் என்று வேதாகமத்தை தனது நெஞ்சோடு அணைத்துக்கொண்டு நின்ற வேளையில், அருகில் நின்ற போர் வீரனது கைகளிலிருந்த துப்பாக்கி முனையிலுள்ள கூரிய கத்தி அவள் சரீரத்தைத் துளைத்தது. வேதத்தை அவள் அணைத்தபடியே துடிதுடித்து ஜீவனை விட்டாள்.

அவள் இரத்தச் சாட்சியாக குத்தப்பட்ட நிலையைக் கண்டவுடன், அவள் கோதுமை மணியாக தன் ஜீவனைக் கொடுத்தவுடன்; ஆலயத்திலிருந்த மற்ற அனைவருடைய விசுவாசமும் பலபட்டது; அதன்பின் ஒருவரும் எழுந்து செல்லவில்லை; அனைவரும் தங்களது ஜீவனையும் இயேசுக் கிறிஸ்துவுக்குக் கொடுக்க உறுதியாகத் துணிந்துநின்ருர்கள்!

ஆம்! கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

நமக்குமுன் மாதிரியான கிறிஸ்து தமது ஜீவனை நமக்காக மகிழ்ச்சியோடு தந்தார். முதல் பலன் ஆனுர். "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தைத்தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்ட நிமித்தம் கர்த்தர் அநேகரை அவருக்குப்

பங்காகக் கொடுத்தார். பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாக பங்கிட்டுக் கொண்டார்!

இதை உணர்ந்தே, யோவான் ஸ்நானகனும், "நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்" என்று வாஞ்சித்து தனது ஜீவனை கோதுமை மணியாக, இரத்தச்சாட்சியாக ஒப்புக் கொடுத்து, சிரச் சேதம் பண்ணப்பட்டான்.

நமது தேசத்தில் இயேசுவின் மேல் அழிவில்லாத அன்பு கூறும் மக்கள் எழும்பவேண்டும் என்றும், இந்தியாவை இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்றும் இந்தியாவிலும் கிறிஸ்துவுக்காக, ஆவி, ஆத்தும, சரீரத்தை இரத்தச் சாட்சியாக கல்வாரியில் வார்க்கும் வாலிபர்எழும்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு, இயேசு கிறிஸ்துவுக்கு சீஷனும், அவரது காயங்களிலும், பிளக்கப்பட்ட விலாவிலும் கையிட்டுப் பார்த்தவனுமான தோமா அப்போஸ்தலன் இந்தியாவுக்குக் கடந்து வந்தார்! தனது இரத்தத்தைச் சென்னைப்பட்டிணத்திலே ஊற்றினர். தோமா அப்போலஸ்தலனின் இரத்தம் சென்னைப் பட்டிணத்தின் இரட்சிபுக்காக தேவனிடம் இன்றும் கூட மன்றாடிக் கொண்டிருக்கிறது!

தேவனுடைய பிள்ளையே! நீ இதை அறியாயோ? இதை குறித்து கவலையில்லையா? கல்வாரிப்பாதை உன்னை அழைக்கிறது!

தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்! இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதைநித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்வான்" (யோவா 12:25)

பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்துக் கொள்! கோதுமை மணியே! உன் முடிவு என்ன? சிலுவையின் அடிவாரத்தில் உன் ஜீவனை வைத்திருக்கிறாயா? கர்த்தாவே! உம் சித்தம் என்னில் நிறைவேறட்டும் என்று ஒப்புக் கொடுப்பாயா?

பாதைக்கு வெளிச்சம் வேதமே!

தேவன் இந்த மண்ணுலகத்திற்கு இரண்டு பெரிய, மிகப் பெரிய ஆசீர்வாதங்களைத் தந்தார்.

1. தமது ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்துக்குத் தந்தருளினார்.

2. விலை மதிக்க முடியாத பொக்கிஷமாகிய வேத புத்தகத்தை மனுஷனுக்குத் தந்தார்.

விக்டோரியா மகாராணியை ஓர் ஆப்ரிக்கத் தலைவன் சந்தித்தான். "இங்கிலாந்தின் சிறப்புக்குக் காரண மென்ன?" என்று அவன் அந்தப் பெருமாட்டியிடம் விசாரித்த போது, "சத்திய வேதமே" என்று அந்த அம்மையார் பதிலுரைத்து வேத புத்தகத்தை உயர்த்திக் காட்டினார்கள். "That book accounts for the supremacy of England"

இயேசு கிறிஸ்து சொன்னார்: வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே" (யோவா.5:39)

தாவீது அரசன்:-"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சிசத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாய் இருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து

ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது'' (சங். 19:10)

சீஷனுகிய பேதுரு:- நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்'' (1 பேது. 2; 3.)

அப்போஸ்தலனுகிய பவுல் : ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும், ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'' (எபி. 4 : 12).

ஆபிரகாம் லிங்கன்:- மனிதனுக்குத் தேவன் கொடுத்த மிகப்பெரிய நன்கொடை வேதப் புத்தகமே என்று நான் நிச்சயித்திருக்கிறேன்.

கோத்தே (Gothe] :-நான் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு ஒரே ஒரு புத்தகத்தை மாத்திரம் நான் வைத்துக் கொள்ள அனுமதி கிடைக்குமானுல், நிச்சயமாக நான் வேதப் புத்தகத்தையே தெரிந்து கொள்வேன்,

மார்டின் லுத்தர்:- வேதம் பழமையானதல்ல. புதுமையானதும் அல்ல; அது நித்தியமானது.''

பேராசிரியர் பெட்டெக்:- வேதம் குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது; ஞானிகளின் ஞானத்தைப் பைத்தியமாக்குகிறது.

வால்ட்டர் ஸ்காட்:- [பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளன்] மரணப்படுக்கையில் உயிர் பிரிவதற்கு சற்று முன்னுல் புத்தகம் கொண்டு வரும்படிக் கேட்டார்! மகன்

எந்தப் புஸ்தகம் என்று திருப்பிக் கேட்டான். "புத்தகம் என்று அழைக்கப்பட தகுதி பெற்றது ஒன்றே ஒன்றுதான். அது வேதபுத்தகம்" என்று பதிலளித்தார்.

ஸ்பர்ஜன்;- "நான் நாலுவது முறை வேதாகமத்தை வாசிக்கிற இந்த வேளையில் முதலாவது முறை வாசித்ததைக் காட்டிலும் இனிமையாக இருக்கிறது" என்று சொன்னார்.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்றார் இயேசு கிறிஸ்து (மத்24: 35)

கிழிக்கப்பட்ட வேதாகமம்:

ஒரு மளிகைக் கடைக்காரரிடம் ஓர் வேதப்புத்தகம் கிடைத்தது. அதன் அருமை தெரியாத அவர், அதிலுள்ள பக்கங்களைக் கிழித்து பொருட்களைப் பொதியும்படி உபயோகித்து வந்தார்!

வேதம் சொல்கிறது. 'வேத வசனம் வெறுமையாய்த் திரும்புவதில்லை' என்று (ஏசா55:11) அப்படி பொருட்களைச் சுற்றிய வேதத்தில் ஓர் தாள்ஒரு மனிதனிடம் வந்தது. அவன் ஒரு கொலையைச் செய்திருந்த படியினாலே நிம்மதியில்லாமல் திரிந்து கொண்டிருந்தான். அவன் அந்தத் தாளைப் பிரித்ததும், "இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை" என்னும் வசனம் அவன் கண்களைக் கவர்ந்தது. (எபிரேயர் 9:22) அவனுக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தது. தனக்குப் பாவமன்னிப்பில்லையே என்று கதறி அழுதான். மீண்டும் அதே கடையில் போய் சாமான்கள் வாங்கியதில் இன்னொரு பக்கம் அவனுக்குக் கிடைத்தது. ஆவலோடு விரித்தான். "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" என்ற வசனத்தை சிவாத்தான் ! (யோவான் 1:7-10)

அந்த இனிமையான வசனங்கள் இருளடைந்திருந்த அவன் உள்ளத்தில் வெளிச்சத்தைக் கொண்டு வந்தது; இரட்சிப்படைந்தான். கிழிந்த பக்கங்கள்கூட ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்த வல்லமையுள்ளது. ஆம்! உண்மைதான்! வேத வசனம் வெறுமையாய்த் திரும்புவதில்லை!

கரைக்கு வந்த வேதாகமம்:

சமீபத்தில் ஜெர்மனியைச் சேர்ந்த ஓர் கப்பல் கடலில் மூழ்கியது. அனைவரும் உயிரிழக்க நேரிட்டது. கரையில் வந்து ஒதுங்கிய ஒரு பிணத்தின் உடையில் ஓர் புதிய ஏற்பாடு இருந்தது. திறந்தபோது அதன் கடைசிப் பக்கத்தில் கீழ்க்கண்ட குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

"என் பெயர் ரோட் மென் மார்க்கு.
No. 12, கோல்க் வீதி,
ஹாம் பெர்க் நகரம்,
ஜெர்மனி.

நான் புதிய ஏற்பாட்டை முதன்முறையாக, என் சகோதரியின் வேண்டுகோளின்படி படிக்க ஆரம்பித்தேன். இரண்டாவது முறை தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு பயந்து படித்தேன். மூன்றாவது முறை இயேசு கிறிஸ்துவின்மீது எனக்கு ஏற்பட்ட அன்பின் நிமித்தம் படித்தேன். நான்காவது முறையும் மற்ற தடவைகளும் கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கப்பட்டே படித்தேன்" என்று எழுதப்பட்டிருந்தது. ஆ! என்ன மேன்மையான மாறுதல்!

தூக்கி எறியப்பட்ட வேதாகமம்:

சில போர் வீரர்கள் ஒரு இரயில் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் உல்லாசமாக இருந்தார்கள். அதில் ஒருவன் மட்டும் ஒரு மூலையில் அமர்ந்து வேதாகமத்தைப் படித்துக் கொண்டிருந்தான். மற்றவர்

களுக்கு இது எரிச்சல் மூட்டுவதாக இருந்தது. அதைப் பிடுங்கி ஓடுகிற இரயில் வண்டியிலிருந்து தூர எறிந்துவிட்டார்கள். அந்த கிறிஸ்தவ வீரனுக்குக் கோபம் வந்ததா? இல்லை! 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்' என்று சொன்ன கிறிஸ்துவின் பக்தனல்லவா அவன்? (மத். 11:26) தன் உள்ளக் கவலையை அமைதியால் அடக்கிக் கொண்டான்.

சில நாட்கள் கழித்து அவனுக்குத் தபாலில், அவனது வேதாகமும் ஓர் கடிதமும் வந்தது. ''ஐயா, நான் இரயில்வேயில் ஊழியம் செய்யும் ஓர் அதிகாரி. தண்டவாளங்களில் ஓர் வேதாகமம் கிடப்பதைக்கண்டு எடுத்துப்படிக்கலானேன். வாசிக்க இனிமையாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. இயேசு கிறிஸ்து என் வாழ்க்கையை மாற்றிவிட்டார். உங்கள் வேதாகமத்திலிருந்த உங்கள் விலாசத்திற்கு அதை அனுப்பியிருக்கிறேன். நன்றி'' என்று எழுதியிருந்தார்.

அப்பொழுதுதான் அந்தப் போர் வீரனுக்கு ஏன் தேவன் தன்னைவிட்டு அந்த வேதாகமத்தைப் பிரித்தார் என்று புரிந்தது. பிரிந்திருந்த அந்த சில காலத்துக்குள் அந்த வேதாகமம், பிசாசைத் தோற்கடித்து, ஆத்தும ஆதாயம் செய்துவிட்டு, மீண்டும் திரும்பிவிட்டது! உண்மை தான். ''வேத வசனம் வெறுமையாய்த் திரும்புவதில்லை'' (ஏசா. 55:11) வேதாகமத்தின் அருமைகளையும் பெருமைகளையும் எழுத வார்த்தைகள் போதாது.

நீ விசேஷித்தவனாக விளங்கவேண்டுமானால் விருப்பத்தோடு வேதத்தை வாசிப்பாயாக! வேதப் புத்தகம் உன் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கட்டும்!

சில ஆலோசனைகள்:

எப்பொழுதும் கையில் வேதாகமத்தையோ அல்லது வேதத்தின் ஒரு பகுதியையோ வைத்திருப்பது நல்லது.

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அதைப் படிக்கலாம். அப்போஸ்தலர் 8: 28 ல் எத்தியோப்பியனுகிய ஒருவன் எருசலேமுக்கு வந்து விட்டு, ஊருக்குத் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்'' என்று பார்க்கிறோம். புறமதஸ்தனுகிய இவனுக்கு வேதத்தின் மேல் எவ்வளவு ஆர்வம் பாருங்கள்!

"நாட்கள் பொல்லாதவைகளாதலால், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்'' (எபே. 5: 16).

1. உனக்காக, உனக்கென்று ஒரு வேதாகமத்தைச் சொந்தமாக்கிக் கொள்.

2. ஒவ்வொரு நாளும் ¼ மணி நேரம் அமைதியாக வேதத்தை வாசிக்கச் செலவிடு. ஒரு நாள் முழுவதிலும் 96 கால் மணி நேரங்கள் உண்டு. ஒன்றை வேத வாசிப்புக்காக செலவிடலாமே! போகப்போக நீயே வேத வாசிப்புக்கு அதிக நேரத்தை ஒதுக்கவேண்டும் என்று விரும்புவாய்!

3. காலைப்பொழுது மிகவும் நல்லது. ஏனென்றால் மனம் திறந்து இருக்கும். வாசிப்பவை மனதில் தங்கும், மற்றபடி உனக்கு ஒய்வான நேரத்தை இதற்காக ஒதுக்கிக் கொள்.

4. மெதுவாக நிறுத்தி தியானத்தோடு வாசி. வாசித்தப் பகுதிகளை சிந்தித்துப் பார்!

5. வாசிக்கும் பொழுது, "கர்த்தாவே, வேதத்திலுள்ள உமது இரகசியங்களை அறியும்படி என் கண்களைத் திறந்தருளும்'' என்று ஜெபி! வேதத்தை எழுதிய பரிசுத்தாவியானவர் வேதத்தை நமக்குப் போதிப்பது போல வேறு எந்த மனுஷனாலும் போதிக்க முடியாது!

6. வேதம் உனக்காகவே எழுதப்பட்டது என்று நினை! எச்சரிப்பின் சத்தத்திற்குச் செவிகொடு! வாக்குத் தத்தங்களைச் சொந்தமாக்கிக் கொள்!!

7. வாசிக்கும் வேளையில் உன் கையில் பேனாவோ, பென்சிலோ இருப்பது நல்லது. முக்கியமான பகுதிகளைக் குறித்துக் கொள்.

8. வேதத்தை வாசித்தபின் முழங்காற்படியிட்டு வேத வாக்கியங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்து, அதில் விளங்காத பகுதிகளை தெளிவுபடுத்திக் கேள்.

9. ஆரம்பத்திலிருந்து முடிவு வரை தொடர்ந்து வாசி. முடிந்து விட்டால் மீண்டும் தொடங்கு. ஒவ்வொரு முறையும் புதிதாகவும், இனிமையாகவும் ஆச்சரியமாக வும் இருக்கக் காண்பாய்.

10. முடிந்தவரை வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்து ஞாபகத்தில் நிறுத்து. "நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடி உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங் 119:11).

எண்ணிலடங்காத ஆசீர்வாதங்கள் கர்த்தர் உனக்குச் செய்வார்! ஆமென்.

அத்தியாயம் 5

கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யார்?

போதகர் செங்' என்பவர் தம் விசுவாசத்திற்காக சிறையிலடைக்கப்பட்டார். அவரோடுள்ள மற்ற கிறிஸ்தவர்கள் யார் யார் என்று அறியும் பொருட்டு, சிறை அதிகாரிகள் அந்தப் போதகரை மிகவும் பயங்கரமாகச் சித்திரவதை செய்து பார்த்தார்கள். ஆனால் அவர் யாரையும் காட்டிக் கொடுக்காமல் மிகவும் உறுதியாக எல்லா வேதனைகளையும், சவுக்கடிகளையும், பசி பட்டினிகளையும் சகித்து வந்தார்.

ஒரு நாள் அவரை ஓர் உயர்தர அதிகாரியின் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். போதகர் நிற்க பெலனற்று கண்கள் இருண்ட நிலையில் தள்ளாடி நின்று கொண்டிருந்தார். திடீரென்று அவரது பார்வை அந்த அறையின் மூலையில் திரும்பியது. அங்கே—

உடல் தெரியும்படி கந்தல் துணியை அணிந்து மெலிந்து போன ஓர் பெண் மணி நடுங்கிக் கொண்டிருந்தாள். போதகர் கூர்ந்து பார்த்தார்!.

அது அவரது தாய்! பெற்று வளர்த்து போஷித்த தாய்! தன் மீது அன்பு வைத்து வளர்த்து போதகராக்கிய அன்பின் உருவம்!

"வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதைப் போல" வேதனையுற்றவராக "இருதலைக் கொள்ளி எறும்பு போல" துடித்தார்.

தாயின் தலை மயிரெல்லாம் நரைத்து வெண்மையாய் இருந்தது. கண்கள் உள்ளே சொருகி ஆழத்திலிருந்தன. எலும்புக் கூடாக இருந்த அன்னையின் முகத்தில் காயங்கள் காட்சியளித்தன! அவர்களும் மிகுந்த பாடுகளின் வழியாக வும் சித்திரவதைகளுக்குள்ளாகவும் கடந்து சென்றிருக்க வேண்டும், என தோன்றியது.

அமைதியைக் கலைத்து, அந்தஉயர்தர அதிகாரி பேசினார்: "கிறிஸ்தவர்களுக்கு பத்து கற்பனைகள் உண்டே; அவைகள் என்ன என்ன என்பதை எனக்குச் சொல்ல முடியுமா?"

போதகர் பேசும் நிலையில் இல்லை. என்றாலும்கூட அந்த கம்யூனிஸ்ட் அதிகாரியிடம் தேவனது கற்பனைகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக, தனது பெலனை வரவழைத்துக் கொண்டு ஒவ்வொரு கற்பனையாகச் சொல்லிக் கொண்டு வந்தார். 'உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணு வாயாக, என்ற கற்பனை வந்ததும் அந்த அதிகாரி நிறுத்தும் படி கேட்டுக் கொண்டார்.

"போதகரே! உமது தாயை கனம் பண்ணுவதற்கு இதோ ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். உம்மோடுகூட உள்ள மற்றகிறிஸ்தவ சகோதரர்கள் பெயரைச் சொல்லுவீரானால், உம்மையும் உமது தாயையும் விடுதலை செய்கிறோம். நீர் உண்மையிலேயே தேவனுடைய கற்பனைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமுடையவரானால்— உமது தாயைக் கனம் பண்ணவேண்டும் என்று விரும்பினால் விசுவாசிகளின் பெயர்களைச் சொல்லும்" என்றான்.

இக்கட்டான சூழ்நிலை! தீர்மானத்திற்கு வரமுடிய வில்லை!!

போதகர் தன் தாயின் பக்கம் திரும்பினார்! அம்மா; நான் என்ன செய்யட்டும்; ஒன்றுமே தெரியவில்லையே" என்றார் வேதனையான குரலில்! தாயின் பதிலென்ன தெரியுமா?

"மகனே! சிறு வயதிலிருந்தே உனக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பைப்பற்றியும், பரிசுத்தமான சபையைக் குறித்தும் நான் கற்றுக் கொடுத்திருக்கிறேன். எனதுபாடுகள் குறித்து நீ கலங்காதே! உன்னை இரட்சிக்க தனது ஜீவனைக் கொடுத்த இரட்சகருக்கு உண்மையுள்ளவனுயிரு! காட்டிக் கொடுக்காதே! நீ மறுதலிப்பாயானுல் நீ என்னுடைய மகனல்ல; நான் உன் தாயல்ல!" என்ருள்.

சரீரத்தை மாத்திரம அழிக்கக் கூடியவர்களுக்கு அந்தத் தாய் அஞ்சவில்லை. "கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?" (ரோம. 8: 36) என்று அவள் நினைத்த வேளையில் அவளது கண்களில் ஓர் பிரகாசம் பளிச்சிட்டது.

அவளைத் 'தர தர' என்று இழுத்துச் சென்ருர்கள். அதன்பின் போதகர் தன் தாயைத் காணவேயில்லை! அவள் சித்திரவதையினுல் மடிந்திருக்கக்கூடும்.

சகோதரனே! உனக்கு இப்படி ஓர் சூழ்நிலை ஏற்படுமானுல் நீ என்ன முடிவு எடுப்பாய்? பாரச் சிலுவையைத் தள்ளாடி தள்ளாடி தோள்களிலே சுமந்து, எருசலேம் வீதி வழியாக நடந்து தியாகபலியாக உனக்காக மரித்தவருக்காக நீயும் இரத்த சாட்சியாக நிற்பாயா? நிற்பாயா?

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவக் கிரீடத்தைப் பெறுவான்" (யாக். 1: 12).

அத்தியாயம் 6

குதிரைகளோடு எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?

"நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது, நீ என்ன செய்வாய்?" (எரே. 12:5).

உன்னிடம் தேவனாகிய கர்த்தர் கேட்கும் கேள்வி இது! பின்மாற்ற அனுபவத்திலும், விழுந்து விழுந்து எழுகிற அனுபவத்திலும், அனலுமின்றி குளிருமின்றி காலத்தை ஓட்டுகிற கிறிஸ்தவர்களின் பரிதாப நிலையைக் குறித்து தேவன் கேட்கும் கேள்வி இதுதான்:

"நீ காலாட்களோடே ஓடும்போதே இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?

ஐந்தாம் வகுப்பிலேயே நீ ஐந்துமுறை ஆறுமுறை தவறி விடுவாயானால் S.S.L.C. எப்படி தேர்ச்சி பெறுவாய்?

தேவன் கிருபையாய் உனக்குக் கொடுத்திருக்கும் தருணங்களைப் பாழ்படுத்துவாயானால், கிருபையின் வாசல் அடைபடுகிற வேளையிலே, எனக்குப் பிரியமானவைகள் அல்ல என்று நீ சொல்லும் வருடங்கள் நெருங்குகிற வேளையிலே நீ என்ன செய்வாய்?"

இன்று உனக்கு முன்பாக திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. நீ ஆலயங்களில் சென்று சுதந்தரமாக பாடலாம்: தேவனைத் துதிக்கலாம். சகோதரரோடு சேர்ந்து உற்சாகமாக ஜெபிக்கலாம்; தெருக்களில் பிரசங்கிக்கலாம்; ஆத்துமாக்களைச் சந்திக்கலாம். ஆனால்—

கம்யூனிஸ்ட் நாடுகளிலே இப்படி ஓர் நாளைக் காண அவர்கள் எவ்வளவு ஏங்குகிறார்கள் தெரியுமா?

ஆலயங்களெல்லாம் மூடப்பட்டு அல்லது தகர்க்கப்பட்டு கிறிஸ்தவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறுர்கள்; சிதறடிக் கப்படுகிறுர்கள்.

வாசிக்க வேதத்தின் ஓர் தாள்கூடக் கிடைக்காமல், ஞாபகமுள்ள ஒரிரண்டு வேதவாக்கியங்களை ஓர் காகிதத்தில் எழுதி மீண்டும் மீண்டுமாய் அதை ஆவலோடு படித்துக் கொள்கிறுர்கள். அவர்களுக்குத் தாங்க முடியாத தாகம்! வேத வாக்கியங்கள் மீது!! கிடைக்கவில்லையே! என் செய்வது!

இரண்டு பேர் கூடிஜெபிப்பது என்பது மிகவும் அபூர்வம் இரவு வேளைகளிலே, ஆந்தைகளும் உறங்கும் நடுநிசிப் பொழுதினிலே கல்லறைகளுக்குள் மறைந்துமறைந்து நான்கு ஐந்து பேராகக்கூடி மெதுவான குரலிலே ஆவியின் வல்லமை யோடு ஜெபித்துக்கொண்டு வருகிறுர்கள்! ஜெபிப்பது தேசத் துக்கு விரோதமான குற்றம். எனவே யாரும் அறியாதபடி அந்தரங்கத்திலே இயேசுகிறிஸ்துவை நோக்கி ஏக்கத்தோடு ஜெபித்து வருகிறுர்கள்! கண்டுபிடிக்கப்பட்டால் சவுக்கடி களும் நீண்டநாள் சிறைவாசமும் உறுதி!

சிறையிலடைக்கப்பட்ட ஒரு போதகர் காலைதோறும் சவுக்குகளால் இரத்தம் பீறிடும்படி அடிக்கப்பட்டு வந்தார். ஆனாலும் அவர் இயேசு கிறிஸ்துவின்மீது வைத்த அன்பில் குறையவில்லை, மறுதலிக்கவில்லை. ஒரு நாள் வேதனை தாள முடியாமல், தன்னைச் சவுக்கால் அடித்த வீரனைப்பார்த்து,

"ஐயா, நானும் உங்களைப் போல ஓர் மனிதன் தானே! உங்களுக்குள்ள எல்லா உணர்ச்சிகளும் எனக்கும் உண்டே! என்னை இவ்வளவாக வேதனையுறும்படி, என் சரீரத்தைச் சவுக்கடிகளால் கிழிக்கும்படி உங்களுக்கு எப்படி மனம் வருகிறது?" என்று வேதனையோடு கேட்டார்.

லெனின் தத்துவத்தை மேற்கோள் காட்டிய அந்த கம்யூனிஸ்ட் வீரனின் பதில் என்ன தெரியுமா?

"முட்டைக்கு வலிக்குமே என்று நினைத்தால் ஆம்லெட் செய்ய முடியாது; மரத்திற்கு வேதனையாயிருக்குமே என்று எண்ணினுல் அழகிய மேஜை நாற்காலிகள் செய்யமுடியாது.

உருளைக்கிழங்குக்கு தோலை உரிக்கிற வேளையில் அதன் துக்கத்தை யார் நினைக்கிறார்கள்? அது போலவே கிறிஸ்தவர்களின் துன்பத்தை நாங்கள் நினைத்தால், எங்கள் தேசம் முன்னேற்றம் அடையாது. எங்கள் தேச முன்னேற்றத்திற்காக உங்களை வேரோடு பிடுங்குகிறோம்'' என்றான்.

இப்பிரபஞ்சத்தின் மக்கள் அதிக ஞானவான்கள்தான். ஆனால் முட்டைக்கும், நாற்காலிக்கும், உருளைக்கிழங்குக்கும் இல்லாத ஆத்துமா, அழியாத, விலைமதிக்க முடியாத ஆத்துமா மனிதனுக்கு இருக்கிறதே! அதை எப்படி அந்த வீரனுக்குப் புரிய வைப்பது?

மாலை நேரத்திலே, நூற்றுக்கணக்கான சவுக்கடிகளுக்குப் பின் பத்துப் பதினைந்து கிறிஸ்தவர்களை ஒருசிறிய சிறைச்சாலை அறைக்குள்ளே பட்டினியோடு போட்டு பூட்டிவிடுவார்கள். தரையெல்லாம் ஈரம்! அதிலேயேதான் மலஜலம் கழிக்கவேண்டும். அதன்மேல் தான் படுத்துக் கொள்ள வேண்டும். படுக்கப் பாயோ, உடுக்கத் துணியோ, வயிற்றுக்கு ஆகாரமோ ஒன்றும் கிடையாது.

நடுஇரவு நேரங்களில் குழாய்களின் வழியாக பட்டினி போடப்பட்ட நூற்றுக்கணக்கான எலிகளை சிறைச்சாலை அறைக்குள் அனுப்பி விடுவார்கள். அவைகள் தாங்கமுடியாத பசியால், சவுக்கடிப்பட்டு இரத்தம் கசிந்துகொண்டிருக்கும் கிறிஸ்தவர்களின் காயங்களைப் பிராண்டி சாப்பிட முயற்சிக்கும். அவைகள் ஒருவித வெறியோடு காயங்களைக் கடிக்கும். அது சவுக்கடிகளைக் காட்டிலும பயங்கரமானது. முழு இரவு வேளைகளிலும், அந்த எலிகளோடு, போராடி, தூங்காமல் தவிக்க வேண்டிய இரவுகள் ஏராளம், ஏராளம்.

நாங்கள் சவுக்கடிகள் பட்ட நாட்களாயினும், பட்டினியால் கிடந்த இரவுகளாயினும் சரி, பயங்கரமான சித்திரவதைகளுக்குள் கடந்து சென்றிருந்தாலும் சரி, அத்தனை வேதனைகளுக்கும் மத்தியிலும், இந்தியாவுக்காகவும் அதன் இரட்சிப்புக்காகவும் ஒரு நாள் கூட நாங்கள் ஜெபிக்கத்

தவறியது கிடையாது என்று போதகர் ரிச்சர்ட் உம்ப்ராண்ட் எழுதுகிறார்.

சுகபோகமாக வாழும் தேவனுடைய பிள்ளையே! உனது ஆத்தும தாகம் எப்படி இருக்கிறது? கட்டுண்ட மக்களுக்காக கம்யூனிஸ்ட் நாடுகளில் இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக நிற்கும் மக்களுக்காக எப்பொழுதாவது நீ ஜெபித்திருக்கிறாயா! பாரத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்திருக்கிறாயா?

ஜெபிக்க எல்லா வாய்ப்பும் கிடைத்திருக்கும் இந்த நாளில் நீ ஜெபிக்கத் தவறுவாயானால் இரத்தப் பழி உன் தலை மீது சுமரும்! உன் உத்தரவாதத்தை அசட்டை செய்யாதே!

''நீ இந்தக் காலத்திலே மௌனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்; அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்'' என்று மொர்தெகாய் எஸ்தருக்கு மட்டுமல்லாமல் நமக்கும் கூட எச்சரிக்கிறான் (எஸ்தர் 4:14)

யோர்தான் பிரவாகித்து வருவதுபோல, நமது தேசத்திலும் துயரம் பெருகும் நாட்கள் வரும்; மனுஷர் மரணத்தை நாடியும் கிடைக்காத தருணங்கள் வரும்! சுவிசேஷ வாசல்கள் அடைக்கப்படும் நாட்கள் அதிசீக்கிரத்தில் வரும்! கிருபையாய்க் கர்த்தர் கூட்டிக் கொடுத்த நாட்களை அலட்சியம் செய்யாதே! உன் தாலந்துகள் அனேகருக்குப் பயன்படட்டும்! உபயோகிப்பாயா?

''காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணுவார்களானால் குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால் யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்?''

அத்தியாயம் 7

பாதையில் பொருத்தனைகள்!

இந்திய நாட்டு கிறிஸ்தவர்களின் பொருத்தனைகளும், ஜெபங்களும் பொதுவாக யாக்கோபின் பொருத்தனையைப்போல இருக்கிறது.

ஆதி. 28 : 20ல் யாக்கோபின் பொருத்தனையைக் காண்கிறோம்:

"அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால் கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்."

சுருக்கமாக, கர்த்தர் ஆசீர்வதித்தால் அவரை வழிபடுவேன் இல்லையென்றால், கஷ்டங்கள் வருமென்றால் கர்த்தரை விட்டுவிடுவேன்; என்பதைப் போல...

நம் நாட்டில் அநேகர் பணத்துக்காகவே கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள்; அநேகம் போதகர்களின் கண்கள் கர்த்தரையல்ல; வெளிநாட்டையே நோக்கிக் கொண்டிருக்கிறது.

ஐயோ! ஒரு காலத்தில் தேவனுக்காக நட்சத்திரங்களைப் போல பிரகாசித்த என் தேசத்தின் வல்லமையான ஊழியர்களை அமெரிக்கப் பணம் கீழே விழுத்திவிட்டதே!

தேவதாரு மரங்களைப் போல உயரவளர்ந்தவர்களை மழையில் முளைக்கும் காளான்கள் போலாகிவிட்டதே! ஒருவன் உலகம் முழுவதிலுமுள்ள ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணிக்கொண்டாலும் தன்னுடைய ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?

என் நேசருடைய சுவிசேஷம் இன்று வியாபாரப் பொருளாகி விட்டதே!

"இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி 15: 19) என்ற வசனம் யாருடைய கண்களிலும் பட வில்லையே!

ஆனால், கம்யூனிஸ்ட் நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களின் பொருத்தனைகள் 'ஆபகூக்' கின் பொருத்தனையைப்போல இருக்கிறது.

"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப்போனாலும் வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" (ஆபகூக் 3: 17- 18).

கர்த்தர் நடத்தும் பாதை எந்தப் பாதையாயிருந்தாலும், முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை! அதுவே அவர்கள் தீர்மானம்! நமது நாட்டில் ஒருவர் இரட்சிக்கப் பட்டால் விசுவாசி ஆகிறார், ஆனால் கம்யூனிஸ்டு நாட்டில் ஒருவர் இரட்சிக்கப்பட்டால் அவர் அங்கே மிஷனெரியாக அல்லது இரத்த சாட்சியாக மாறுகிறார்.

ஒரு கிறிஸ்தவர் அநேக ஆண்டு சிறைவாசத்துக்குப் பின்னால் விடுதலை செய்யப்பட்டார். அவர் ஓர் ஏழை விவசாயி. சிறைவாசம் அவரை இயேசு கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரித்துவிடவில்லை! விடுதலையாக்கப்பட்ட பின், தனிமையாக வயல்வெளியில் போய், "கர்த்தாவே என்னைப் பூரணப்படுத்தும்" என்று ஜெபித்துக் கொண்டே வந்தார். கர்த்தர் அவரைப் பார்த்து, "நீ பூரணராகும்படி மறுபடியும் சிறை செல்ல தயாரா?" என்று கேட்டார்.

“மறுபடியுமா? எப்படி முடியும்? எப்படி மறுபடியும் சவுக்கடிகளையும், பட்டினியையும், துர்நாற்றத்தையும் சகிக்க முடியும்? ஆண்டவரே சிறைவாசத்தைத் தவிர மற்றபடி என்னைப் பூரணப்படுத்தும்” என்று திரும்பி ஜெபித்தார். பதில் இல்லை! எனவே “கர்த்தாவே என்ன வந்தாலும் சரி; என்னை ஒப்புக்கொடுக்கிறேன்; உமது பூரணசித்தம் என்னில் நிறைவேறட்டும். நான் பூரணராகும்படி ஒப்புக்கொடுக்கிறேன்” என்று ஜெபித்தார்.

சில நாட்களில் மறுபடியும் கைது செய்யப்பட்டார். அநேக ஆண்டுகளைத் தனிமைச் சிறையில் கடத்தினர். பல ஆண்டுகளுக்குப் பின்பு, தனது அறையின் பக்கத்தில் அடை பட்டிருப்பவர் யார் என்று விசாரிக்கவே அது தனது மகன் என்று அறிந்தார்! தனது தகப்பனாரின் தீரமான முன்மாதிரியைப் பின்பற்றி மகனும் கிறிஸ்துவுக்காக பாடனுபவிக்க விரும்பினான். தனது மகனும்கூட கிறிஸ்துவின் சிலுவையின் மேன்மைக்காக சிறைவந்திருப்பதைக் கண்ட தகப்பனாரின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. பல ஆயிரம் தோத்திரங்கள் ஏறெடுத்தார். இதை வாசிக்கும் சகோதரனே! உனது தீர்மானம் எப்படியிருக்கிறது? யாக்கோபின் பொருத்தனையா? அல்லது ஆபகூக் பொருத்தனையா?

உனக்கும் இதைப்போல் சோதனைகள் வரும்போது, சாத்ராக், மேஷாக் ஆபெத்நெகோவைப்போல், “நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார், அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்; விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது” என்று சொல்லமுடியுமா?

ஒரே ஒரு வாழ்க்கை. வாழ்ந்தால் கோழையாக அல்ல; இயேசுவுக்காக விசுவாச வீரனாக, ஊழியம் செய்பவனாக, இரத்தச் சாட்சியாக வாழத் தீர்மானிப்போம்! தீர்மானம் யாக்கோபைப் போல அல்ல; ஆபகூக் போல இருக்கட்டும்!

அத்தியாயம் 8

கண்ணீரின் பாதையில் ஓர் சாட்சி!

"நரகத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"இருளில் தனிமையில் தான் செய்த தீவினைகளுக்காக தன்னையே நொந்து கொள்கிற இடம்தான் நரகம்?"

நரகத்தைப் பற்றி எனது கணவர் தமது நண்பர்களுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்; ஆனால் சில நாட்களுக்குள் அவரே நரகவேதனையடைய வேண்டியதாயிற்று.

1948 ஆம் ஆண்டு பெப்ருவரி 26 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் 'அவர்' ஆலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அவர் போன சில நிமிடங்களுக்கெல்லாம் நான் ஆலயத்துக்கு வந்துவிட்டேன். ஆனால்—அவரைக் காணோம்.

அங்கு போதகாரயிருந்த பாஸ்டர் சோலிம் அவர்களிடம் விசாரித்தேன். அவருக்கும் தெரியவில்லை. கையை விரித்தார்.

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவசரமாக எல்லா மருத்துவமனைகளுக்கும் போலீஸ் செய்துவிசாரித்தேன். ஏதாவது விபத்தில் மாட்டிக்கொண்டாரோ என்னவோ!

ஓடியாடித் தேடினேன்-எங்கும் காணோம்! கடைசியாக உள்துறை அமைச்சரவைக்குப் போன் செய்து பார்த்ததில் வேதனைக்குறிய செய்தி என் காதுகளில் தொனித்தது.

''அவர் கைது செய்யப்பட்டிருர்!'' ஓடினேன் அங்கே! அந்த அமைச்சரவையில் வேறு ஏதாவது செய்திகள் அவரைப்பற்றிக் கிடைக்குமா என்று ஆவலோடு காத்திருந்தேன்.

எத்தனையோ தாய்மார்கள், ஏழைக் குழந்தைகள் நம்பிக்கை ஏதுமின்றி தங்கள் கணவருக்காக—தகப்பனுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்! எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை!!

கண்ணீர் நிறைந்த கண்களோடு தள்ளாடித் தள்ளாடி வீட்டுக்கு வந்தேன். எங்கும் இருள்மயம். ஒவ்வொரு நாள் சாயங்காலமும் சமையலை முடித்தபின் ஜன்னல் அருகே உட்கார்ந்து கொண்டு, ''என் கணவர் திரும்ப வரமாட்டாரா, வந்துவிட மாட்டாரா'' என்று வீதியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏக்கப் பெருமூச்சுதான் அடிவயிற்றிலிருந்து வந்தது! அவர் வரவேயில்லை!!

பாஸ்டர் சோலிம் ஓர் வெளிநாட்டு மிஷினெரி. என் நிலை கண்டு உதவி செய்ய முன்வந்தார்!

நானும், அவரும், ஸ்வீடன் தேசத்து தூதர் ஒருவருமாக வெளி உறவு அமைச்சரான திருமதி ஆனு பார்க்கரிடம் சென்ருேம். அவர்கள் ஓர் பதிலை தயாராக வைத்திருந்தார்கள்.

''எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி, போதகர் ரிச்சர்ட் உம்ப்ராண்டு பஞ்ச நிவாரணத்திற்கு வந்த பணங்களையெல்லாம் சுருட்டிக் கொண்டு, தலைமறைவாகி டென்மார்க் தேசத்திற்கு ஓடிவிட்டார்.''

பிரதம மந்திரியும் அதே பதிலைத்தான் கேலியாகச் சொன்னார். "உம்ப்ராண்டு எங்கள் சிறைச்சாலையில்தான் இருக்கிறார் என்று நிரூபித்தால் அவரை விடுதலையாக்குகிறேன்" என்றார் சிரித்தபடி.

எப்படி நிரூபிப்பது? ரகசிய போலீசிடம் சிக்கி கம்யூனிஸ்ட் சிறையில் அடைக்கப்பட்டால் அவ்வளவுதான். எந்தத் தடயங்களும் வெளிவராது!

மாதங்கள் பல உருண்டன. ஓர் நாள்—ஓர் மனிதன் என்னைப் பார்க்க வந்தான். குறுந்தாடிக்காரன், அவன் என் அருகில் வந்ததும் சாராய நெடி வீச ஆரம்பித்தது.

"நான் சிறைச்சாலையில் வார்டராக இருக்கிறேன்; உங்கள் கணவர் இருக்கும் இடம் எனக்குத் தெரியும்" என்றான் அவன்!

எனக்கு ஒரே ஆனந்தம்! எங்கேயிருக்கிறார்? எப்படியிருக்கிறார்? என்ன சொன்னார்?...கேள்விகளை வாஞ்சையோடு அடுக்கினேன்.

அவன் புத்திசாலி; "தனக்குக் குடிப்பதற்கு பணம் நிறையத் தருவதானால் சொல்லுகிறேன்" என்று சொல்லி விட்டான்!

அவன் கேட்டத் தொகை மிகப்பெரிய தொகை! இரண்டு நாட்களுக்குப்பின் என் கணவரிடமிருந்து ஓர் சிறு குறிப்பை ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டு வந்தான்!

"என் அருமை மனைவிக்கு, உன் அன்புக்கு நன்றி! நான் சுகமாயிருக்கிறேன்.— ரிச்சர்ட் உம்ப்ராண்ட்" இவ்வளவுதான் எழுதியிருந்தார். அது அவருடைய கையெழுத்துதான்.

நிரூபணம் கிடைத்துவிட்டது! நிரூபித்தால் விடுதலையாக்குவேன் என்று பிரதம மந்திரி சொன்னாரே!!

மீண்டும் அவரிடம் நானும், பாஸ்டர் சோலிமும், வெளி நாட்டு தூதரும் ஓடினோம்,

ஆனால் பிரதம மந்திரியோ, உள்துறை அமைச்சரோ அதை சட்டை செய்யவில்லை. மாறாக, எங்களுக்குத் துணை வந்த வெளி நாட்டுத் தூதுவர் தமது தேசத்திற்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே அவரை அவர் வேலையி லிருந்து நீக்கி விட்டார்கள்.

அதுமட்டுமல்ல! மிஷினெரியாகவும் எங்களுக்குத் துணை யாகவும் இருந்த பாஸ்டர் சோலிம் உடனடியாக ருமானியா தேசத்திலிருந்து வெளியேறி விடவேண்டும் என்ற உத்தரவு வந்து விட்டது; அவரது உதவியும் அற்றுப்போயிற்று!

'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பது பழமொழி! சிலந்திப் பூச்சியிடம் சிக்கிய ஈயைப்போல என் நிலையாயிற்று. நான் ஓர் அரசியல் கைதியின் மனைவியா யிருந்தபடியினால் என்னிடமிருந்த ரேஷன் கார்டு (Ration Card) பறிமுதல் செய்யப்பட்டது. ருமானியாவில் ரேஷன் கார்டு இல்லாவிட்டால் எந்த உணவுப் பொருளையோ, மற்ற பொருட்களையோ கூட வாங்க முடியாது. சாப்பாடில்லா மல் திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டது!

எல்லாத் தொழில்களையும் அரசாங்கமே ஏற்று நடத்திய தால் நான் வேலை செய்து பிழைக்கும் நிலையும் இல்லை. எனக்கு வேலையும் இல்லை.

நான் எப்படி வாழ்வது? என் மகனின் எதிர்காலம் என்ன? என் வீட்டில் வளர்த்து வந்த ஆறு அனாதைச் சிறுவர் களையும் இஸ்ரவேல் தேசத்திற்கு அனுப்பி விடுவது என்ற முடிவுக்கு வந்தேன். இப்படிப்பட்ட அனாதைச் சிறுவர்களைச் சுமந்து செல்ல துருக்கி தேசத்துக் கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது! நான் வளர்த்த சிறுவர்கள் ஓடிப்போய் அதில் ஏறிக் கொண்டார்கள். நானும், என் மகன் மிகாயும் வழியனுப்பி வைத்தோம்.

அந்தக் கப்பல் புறப்பட்டது; ஆனால் போய்ச்சேரவில்லை வழியில் எப்படியோ ஓர் தளவாடத்தில் மோதி முழுவதுமாக அமிழ்ந்து விட்டது. ஒருவராலும் உயிர் தப்ப முடியவில்லை!

அந்தக் குழந்தைகளை நினைத்து விம்மி விம்மி அழுதேன். என் குழந்தைகள் போலல்லவா வளர்த்தேன்? எப்படி என் மனம் ஆறுதலடையும்?

''என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்' என்று கூறிய என் தெய்வம் இயேசு கிறிஸ்துதான் என்னை ஆறுதல் படுத்தினார். என்னுடைய கவலையில் என்னுடைய மகனையும் நான் தேற்ற வேண்டியதிருந்தது. அவன் கதறிக் கதறி அழுதுகொண்டே இருந்தான்.

என் கணவர் முன்னால் எனக்குச் சொல்லியிருந்த கதை ஒன்றை அவனுக்குச் சொல்லி ஆறுதல் படுத்தினேன்.

''ஒரு ஊரில் ஓர் தெய்வ பக்தியுள்ள ஒரு 'ரபீ' இருந்தார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இருவரும் கல்வியறிவிலும், அழகிலும் மேன்மையிலும் மிகவும் சிறந்து விளங்கினார்கள். ரபீ தனது இரண்டு பையன்கள் மேலும் முழு அன்பையும் செலுத்தி கண்மணி போல வளர்த்து வந்தார்.

ஓர் நாள் ரபீ வெளிவேலையாக சென்றிருந்த வேளை. திடீரென்று அவரது இரண்டு மகன்களும் ஒருவர் பின்னால் ஒருவராய் இறந்து விட்டார்கள். மனைவிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வெள்ளைப் போர்வையால் தனது குமாரரின் சடலங்களைப் போர்த்தினாள்.

இரவிலே வீடு திரும்பிய 'ரபீ' தன் மனைவிபிடம் குழந்தைகள் எங்கே என்று விசாரித்தார்! அவள் பதில் சொல்லவில்லை.

அவரை அமர வைத்து இரவுச்சாப்பாட்டைப் பரிமாறினாள். உபசரித்தாள். மெல்லிய குரலில் அவரிடத்தில்,

“ஐயா, சில நாட்களுக்குமுன் எனது சொந்தக்காரர்ஒருவர் தனது நகைகளை, ஆபரணங்களை என்னிடம் கொடுத்து வைத்திருந்தார்: தான் வெளியூர் போய்த் திரும்பும் வேளை அதைத் திரும்ப பெற்றுக் கொள்வதாக சொல்லிச் சென்றார்.

இன்று வந்து என்னிடம் கேட்டார். நான் கொடுத்து விடட்டுமா? உங்களிடம் கேட்டுத்தான் கொடுக்க வேண்டும் என்று வைத்திருக்கிறேன்” என்றாள்.

உடனே ரபீ தன் மனைவியிடம், “அவரது நகைகளை அவர் வந்து கேட்டால் அவரிடம் கொடுத்து விட வேண்டியதுதானே? என்னிடம் ஏன் கேட்க வேண்டும்” என்றார் ஒன்றும் அறியாதவராக.

அவர் இப்படிக் கூறியதும் மனைவி மெதுவாக அவரது கரத்தைப் பிடித்து நடந்து தங்களின் மழலைச் செல்வங்களின் சடலங்களை அவருக்குக் காட்டினாள்.

‘கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார் அவரது பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்’ என்று அவர்கள் உதடுகள் முணுமுணுத்தன!

தனது நண்பர்களை இழந்த என் மகனுக்கு ஆறுதலாக இந்தக் கதையை அவனிடம் சொன்ன போது கொஞ்சம் தெளிவு பெற்றான்.

என் கணவனூர் கைதான அதே வருடம்தான் இஸ்ரவேல் தேசம் உருவானது. தேவனுடைய கோபத்தால் சிதறடிக்கப் பட்ட யூதர்கள் எல்லா தேசங்களிலிருந்தும் பூமியின் கடையாந்தரங்களிலிருந்தும் இஸ்ரேல் தேசத்தில் வந்து கூடினார்கள்.

“இதோ நான் அவர்களை வட தேசத்திலிருந்து வரப் பண்ணி, அவர்களை பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டி வருவேன்...மகா கூட்டமாய் இவ்விடத்திற்கு திரும்புவார்கள் என்று எரேமியா 31 ஆம் அதிகாரத்தில் சொன்னபடி கர்த்தர் கூட்டி சேர்த்துக் கொண்டிருந்தார். எங்கள் தேச

மாகிய ருமானியாவிலிருந்தும் ஒரு கூட்டம் ஜனங்கள் இஸ்ர வேலை நோக்கிப் புறப்பட்டார்கள்.

எனக்கு அருமையாயிருந்த யூதர் குடும்பங்களுக்கு நான் வழிவிட்டனுப்பினேன்; ஒவ்வொரு நண்பரும் என்னைவிட்டுப் போய்க் கொண்டேயிருந்தனர். அவர்கள் எல்லோரும் போவதைக் கண்ணீரோடு பார்த்துக் கொண்டு நின்றேன்.

ஓர் நாள் ஓர் உயர்தர போலீஸ் அதிகாரி என்னிடம் வந்தார். ''அம்மா! எனக்குக் கொஞ்சம் பணமும். நான் யூதன் என்று சொல்லும்படி ஒரு விசாவும் வாங்கித் தர ஒழுங்கு செய்தால், உங்கள் கணவனைச்சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்க என்னால் முடியும்'' என்று சொன்னார்.

என் கணவரை விடுதலையாக்க நான் என்ன தியாகமும் செய்யத் தயாராக இருந்தேன். அந்தப் போலீஸ் அதிகாரி யால் எல்லாம் செய்ய முடியும் என்று விசாரித்து அறிந்து கொண்டேன். என் மகன் 'மிகாய்'யிடம் கூறினேன்.

அப்பொழுது அவனுக்கு வயது பத்து. அவன் தன் வயதுக்கேற்றபடி வளர்த்தியாகவும் வாட்டசாட்டமாகவும் துருதுரு என்றிருக்கும் கண்களோடும்-தகப்பனின்றி வளர்ந்து வந்தான். அவனை, அவன் பள்ளிக் கூடத்தில் ''ஓர் துரோகி யின் மகன்'' என்றும், ''ஓர் சமுக விரோதியின் மகன்'' என்றும், அழைத்தார்கள். என் மகனுக்கு தன் தகப்பனாரை ஏன் இழுத்துக் கொண்டு போய்ச் சிறைச்சாலையில் வைத் திருக்கிறார்கள் என்று புரிய வில்லை. இந்த சிறு வயதில் முழு வதுமாக விளங்கிக் கொள்ளவும் முடிய வில்லை. ஆனால் அவன் தன் தகப்பனார்மீது அளவற்ற அன்பு வைத்திருந்தான். உயிராக நினைத்தான்.

நான் அவனிடம் போலீஸ் அதிகாரி மூலம் கிடைத்த புது நம்பிக்கையைச் சொன்னேன்; மகிழ்ச்சியால் அவன் கண் கள் பரவசமடைந்தது.

ஆனால் மறுநாள் காலையில் மீண்டும் அவன் துயரமாக இருந்தான். அவன் இரவில் கண்ட சொப்பனத்தின்படி

போலீஸ் அதிகாரியின் திட்டம் கைகூடி வராது என்றும், தன் தகப்பனார் விடுதலையாகமாட்டார் என்றும் சொன்னான். என் மகன் காண்கிற சொப்பனங்கள் சரியாக இருக்கும். அவன் சொன்னபடி அந்த போலீஸ் அதிகாரி இரண்டொரு நாட்களுக்குள் கைது செய்யப்பட்டு, பரிதாபமாக தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டார்.

ஒவ்வொரு நாளும் பலர் கைது செய்யப்பட்டுக் கொண்டேயிருந்தார்கள். பலர் தலைமறைவாகிக் கொண்டிருந்தார்கள். வாழ்க்கை கசப்பாகவும், வெறுமையாகவும் வேதனையாகவும், நிலையற்றதாகவும் நகர்ந்துகொண்டிருந்தது.

ஒருமுறை அநேகக் கைதிகள் விடுதலையாக்கப்பட்டார்கள். ஆம்புலன்ஸ்களில் தங்கள் தங்கள் வீடுகளுக்கு வந்து சேர்ந்தார்கள்.

எலும்பும் தோலுமாக காட்சியளித்த அவர்களில் சிலரை நான் பார்த்தேன். அவர்களது உடலெல்லாம் காயங்களும், தழும்புகளுமா யிருந்தன. சதைகள் தோண்டியெடுக்கப்பட்டிருந்தன. அப்பப்பா! கண்கள் கூசுகின்றன.

இப்படியெல்லாம் மிருகத்தனமாக மற்றவர்களைச் சித்திரவதை செய்ய அரசாங்கத்திற்கு எப்படித்தான் மனம் வருகிறதோ! எப்பொழுதுதான் கண்ணீரும் கவலையும் இந்த உலகத்தைவிட்டு அகலுமோ!

விடுதலையாக்கப்பட்ட அந்த கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டார்கள்! மக்களின் மத்தியில் ஓர் அச்சத்தையும் பீதியையும் பரவவிடுவதே அரசாங்கத்தின் நோக்கம் போலும்!

என் கணவனாரின் நினைவு என் நெஞ்சைப் பிளந்தது! இந்த நிமிடம் அவர் என்ன பாடுகள் பட்டுக் கொண்டிருக்கிறாரோ? அவரும் சித்திரவதைகளுக்கு உள்ளாகியிருப்பார்! எப்படி சவுக்கடிகளையும், இரும்புக்கம்பிகளால் உடலெல்லாம் சூடு போடப்படுவதையும், ஊசிகளால் விரல்கள் துளைக்கப் படுகிறதையும் எப்படித்தான் சகிக்கிறாரோ?

அவர் விசுவாசத்தை விட்டும், இயேசு கிறிஸ்துவின் அன்பைவிட்டும் விலகிவிடக் கூடாதே என்று கண்ணீரோடு ஜெபித்தேன். பவுல் அப்போஸ்தவன் "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுல மோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங் கொள்கிறவர்களாயிருக் கிறோமே" (ரோம. 8: 35-39) என்று உறுதியாய்ச் சொல்லு கிறரே!

சித்திரவதைக்குள்ளாகி என் கணவர் மரிப்பாராகில், நான் அவரை மறுவாழ்க்கையில், இயேசு கிறிஸ்துவின் சந்நிதானத்தில் மகிழ்ச்சியோடு சந்திப்பேன். அல்லேலூயா! யார் முதலில் மரித்தாலும் சரி; பரலோகத்தின் பன்னிரண்டு வாசல்களில் ஒன்றில் ஒருவருக்காக மற்றவர் காத்துக்கொண் டிருக்க வேண்டும் என்று நாங்கள் முன்னரே தீர்மானித்திருந் தோம். என் கணவர் தான் முதலில் மரித்தால் பென்யமீன் வாசலருகில் பரலோகத்தில் எனக்காகக் காத்துக் கொண் டிருப்பதாக வாக்குக் கொடுத்திருந்தார்! அங்கு ஓயாத மகிழ்ச்சி எங்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது!! அங்கு எங்களை யாரும் பிரிக்க முடியாது! அல்லேலூயா! துன்புறுத்த முடியாது! ஆமென்!!

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தமது சீஷர்களிடம் இப்படிப்பட்ட ஓர் வாக்குறுதி கொடுத்திருந் தார். தன் மரணத்திற்குப்பின் சீஷர்களைக் கலிலேயாவில் சந்திப்பதாக. அப்படியே தாம் உயிர்த்தெழுந்ததும் சீஷர் களைக் கலிலேயாவில் சந்தித்தார்! அல்லேலூயா!!

கர்த்தர் இந்த உலகிலேயே என் கணவரைக் காண கிருபை செய்தார். ஆனுல் அதற்குள் பதினைந்து ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன!

Mrs. SABINA WUMBRAND
(in Pastor's Wife)

அத்தியாயம் 9

திறப்பின் வாசலில்.........நீ!

"எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல் முழுவதும், இரா முழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன், கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது" (ஏசா. 62:6).

"இப்பொழுதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தை கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டார்; நீ திடன் கொண்டு அதை நடப்பி" (1 நாளா. 28:10).

திறப்பின் வாசலில் நிற்கும்படியாக தெரிந்து கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளையே! தேவனாகிய கர்த்தர் உன்னை அழைத்ததையும், உன்னை நேசித்ததையும், உன்னைத் தெரிந்து கொண்டதையும், உன் கரங்களில் இந்த ஊழியத்தைக் கொடுத்ததையும் சிந்திப்பாயாக!

நம் தேசத்தில் ஆயிரம் ஆயிரம் மக்கள் இருப்பினும் கர்த்தரின் கண்கள் உன்னை அல்லவா கண்டது! நீ உத்திரவாதத்தோடு திறப்பின் வாசலிலே—முழங்காலிலே—ஊக்கமான ஜெபத்திலே நிற்க மாட்டாயா என்று அவரது உள்ளம் எவ்வளவாக ஏங்குகிறது! எதிர்பார்க்கிறது!

1. தேவனுடைய ஊழியக்காரர்களுக்காக:

நட்சத்திரங்களைப் போல பிரகாசித்த தேவனுடைய பிள்ளைகள் பலரும் வீழ்ச்சியடைந்து கிடக்கிறதை நீ காண்

கிறாயல்லவா? ஒருக்காலமும் இராத தூக்கமும், மயக்கமும் நமது சபைகளிலே இருக்கிறது அல்லவா! பணத்தின் பிடியாலே— முக்கியமாக அமெரிக்காவின் பணத்திற்காக எத்தனைபேர் சத்தியத்தை விலைபேசி, தேவனை மீண்டும் மீண்டுமாக சிலுவையிலடிக்கிறார்கள். தேவனுடைய பிள்ளையே, நீ உன் உள்ளத்தைக் கிழித்து தேவனுடைய சமூகத்திலே கண்ணீரோடு திறப்பின் வாசலிலே நிற்கமாட்டாயா?

"என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக்கூடும்?" என்று எஸ்தர், ராஜாவிடம் கதறினாளே அதேபோல நீயும் உபவாசித்து தேவனிடத்தில் போராட மாட்டாயா?

தானியேல் ஜெபித்ததை தானியேல் 9:3லிருந்து பார்க்கிறோம். "நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட, என் முகத்தை அவருக்கு நோக்கி, என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து..."

தானியேலைப் போல ஜெபிக்கும் ஜெப வீரனாக நீ இருக்க தேவன் விரும்புகிறார். நீ ஒப்புக் கொடுக்க மாட்டாயா?

2. நம்முடைய தேசத்திற்காக

தேசத்துக்காக யுத்தஞ் செய்ய உன்னை தேவன் முழங்காலிலே நிறுத்தியிருக்கிறார். ஆனால் நீயோ புத்தியில்லாத கன்னிகையைப்போல் கன நித்திரையாயிருக்கிறாய்! உன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து சுவிசேஷத்திற்கான வாசல்கள் கொஞ்சம் கொஞ்சமாக அடைபட்டு வருவதைக் காணமாட்டாயா! எத்தனை மாநிலங்களில் சுவிசேஷம் கூறமுடியாதபடி சட்டங்கள் வந்துவிட்டது! வெளிநாட்டு மிஷினெரிகள் வரமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது! உன் பிள்ளைகளோ

தேவனுக்காக வைராக்கியம் பாராட்டி இயேசுவுக்காக நிற்பதை விட்டுவிட்டு உலகின் பின்னே ஓடுகிறுர்கள். இயேசு அப்பாவின் கண்கள் தன் காரியமாக யார் போவான் என்றும் திறப்பின் வாசலில் யார் நிற்கிறுர்கள் என்றும் ஆவலோடு எதிர்பார்க்கிறது! ஆனுலும் ஏமாற்றமும் வேதனையும்தான் அவர் முகத்தில் தெரிகிறது!!

தெரிந்து கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளையே; இயேசுவின் கண்ணீரைத் துடைக்க நீ திறப்பின் வாசலில் நிற்க மாட்டாயா? உனக்காக முள்முடி சூட்டப்பட்டவரின் முகத்தில் வழியும் இரத்த வேர்வையை நீ துடைத்து அவரை மகிழ்ச்சிப் படுத்தமாட்டாயா? உன்னிடம் பெரிய ஊழியங் களையோ, பிரசங்கங்களையோ அவர் எதிர்பார்க்கவில்லை! அவரை நேசிக்கிற உள்ளத்தோடு அவர் சமூகத்தில், அவர் பாதங்களில் நீ ஜெபிப்பதையே விரும்புகிறுர். மனத் தாழ்மையோடு, கண்ணீரோடு, உத்திரவாதத்தோடு அவருக் காக நீ நிற்பாயா! தேவன் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுக்க வேண்டுமென்றுல் தேவனுடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, அவர் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பவேண்டும் என்று II நாளா 7:14ல் பார்க்கிறேும்.

‘‘சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதி யளவு கண்ணீர்விடு; ஓய்ந்திராதே; உன் கறுப்பு விழி சும்மா யிருக்க வொட்டாதே; எழுந்திரு! இராத்திரியிலே முதற் சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமூகத்தில் உன் இதயத் தைத் தண்ணீரைப்போல் ஊற்றிவிடு; எல்லாத் தெருக் களின் முனையிலும் பசியால் மூர்சித்துப் போகிற உன் குழந் தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு’’ (புலம்பல் 2:18, 19)

3. கிராமங்களுக்காக

‘‘வாரும் நேசரே! வயல் வெளியில்போய் கிராமங்களில் தங்குவோம்’’ [உன்னதப்பாட்டு7:11] என்று தேவனை நீ

அழைப்பாயாக! தெபோராளாக தேவன் உன்னைத் தெரிந்து கொண்டாரே! தெபோராளே விழி எழுந்திரு. "தெபோராளாகிய நான் எழும்புமளவும் இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும் கிராமங்கள் பாழாய்ப் போயின; இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்போயின." என்று நியாயாதிபதிகளின் புத்தகத்தில் தெபோராளின் ஏக்கத்தைப் பார்க்கிறோம்!!

ஏழை கிராம மக்கள் – இயேசுவின் அன்பை அறியாமல் விக்ரகங்களுக்குப் பயந்து. புகலிடம் இல்லாமல் தவிக்கிறார்களே! அந்தகாரத்திலேயே வாழ்ந்து மடிகிறார்களே அவர்களுக்காக நீ திறப்பின் வாசலிலே நிற்கமாட்டயா? இயேசுவை அறியாமல் எத்தனை எத்தனை கிராமங்கள் இந்தியாவில்! இரத்தப்பழி யார் தலையில் சுமரும்? திறப்பின் வாசலில் தூங்கும் உன் தலையிலல்லவோ! எரேமியாவின் பாரம் நமக்கு இருக்கட்டும்! ஆ என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்! அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்" (எரே 9: 1)

4. ஆத்துமாக்களுக்காக :

நம்மீது அவர் வைத்திருக்கும் பொறுப்பும், உத்தரவாதமும் பெரிது! நம்முடைய போராட்டம் நமது எதிராளியான பிசாசின் வாயில் அகப்பட்டிருக்கும் ஆத்மாக்களை விடுவிப்பதே! பிசாசானவன்' கெர்சிக்கிற சிங்கம்போல் யாரை விழுங்கலாமென்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான். (1 பேது 5: 8)

"ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல; துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே. 6 : 12)

''ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்' (லூக் 21 : 36)

தேவ பெலத்தோடே பிசாசுக்கு ஜெபத்தில் எதிர்த்து நிற்போம்! அவன் ஓடிப்போவான். ஜெயமெடுத்தவரும், பிசாசின் தலையை நசுக்கினவரும் உன்னோடு இருப்பதால் ஜெபத்தில் நீ தரித்திருக்கும்போது, நீ ஜெயமெடுப்பாய். அல்லேலூயா! இந்த ஆண்டில் ஜெபத்தின் வல்லமையை நீ உணர தேவன் அருள் செய்வார்.

தானியேல் ஜெபம் பண்ணி வேண்டிக்கொள்ள தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. தேவதூதன் காபிரியேல் வேகமாய்ப் பறந்து வந்தான் என்று தானியேல் 9:21 ல் பார்க்கிறோம்.

எரிகோ கோட்டை விழுந்தது! இஸ்ரவேலர் ஆர்ப்பரித்துத் துதித்தபோது. எளிதாகக் கோட்டையைத் தகர்த்தார்கள் (யோசுவா 6: 20) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளையே! நீ தேவனுடைய அன்பால் நிறைந்து ஸ்தோத்தரித்து ஜெபிக்கும்போது உனக்கு விரோதமாக நிற்கும் எல்லா கோட்டைகளும் விழும். இரும்பு தாழ்ப்பாழ்கள் முறிந்து வெண்கலக் கதவுகள் உடையும்.

''பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்'' (அப். 12:5) என்ன நடந்தது? தேவதூதன் இறங்கினான்! சங்கிலிகள் விழுந்தன! விடுதலையானான்! ஊக்கமான ஜெபம் சிறையில் அகப்பட்டவர்களை விடுதலையாக்கும்! ஊக்கமான ஜெபம் பிணியாளியை சுகப்படுத்தும்! ஊக்கமான ஜெபம் வானத்தை அடைக்கவும் திறக்கவும் செய்யும்! எலியாவின் பெலத்தோடும் எலியாவின் ஜெபத்தோடும் நீ உன் தேவனோடு நடப்பாயாக!

இயேசு கிறிஸ்து நமக்கு முன்னால் என்ன முன்மாதிரியை வைத்துவிட்டுப் போனார்? வேதத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இயேசுவின் முதல் ஜெபம் அது! (லூக். 9: 21) "ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது" (லூக். 9: 29) "அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது.

நமக்கு முன்னாக நடந்து சென்ற நமது தேவன் இயேசு ராஜா ஜெப வீரனாயிருந்தார். இரவெல்லாம் மலைமீது ஏறி ஜெபித்தார். அவரால் அழைக்கப்பட்டு அவரது அடிச்சுவடுகளைத் தொடரும் தேவனுடைய ஜனமே! உன் முகம் பிரகாசமடையவும், நீ பரிசுத்தமடையவும், தேவனது பாதத்தில் காத்திரு. மரியாளைப் போல அவர் பாதங்களில் உன் உள்ளத்தை ஊற்றிவிடு! திறப்பின் வாசலில் நீ நிற்பதை மறந்துவிடாதே!

இயேசு ராஜா! கை மண்ணிலிருந்து எங்களை உருவாக்கி நித்திய ஜீவனை எங்களுக்குத் தந்து, எங்களைஇராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் அபிஷேகித்தவரே! உமது பாதங்களிலே தாழ்மையோடு காத்திருக்கிற ஜெப ஆவியை எங்களுக்குத் தாரும் ஐயா! எங்கள் தேசத்தை உயிர்ப்பிக்க ஜெப வீரரை எழுப்ப மாட்டீரா! வாலிபரை விண்ணப்பத்தின் ஆவியாலே நிரப்பியருளும். உமது சிலுவையின் பாதங்களே எங்களுக்குத் தஞ்சமாக இருக்கட்டும். உமது கண்களால் எங்களை நடத்துவீராக! ஆமென்!!

அத்தியாயம் 10

கல்யாண விருந்தும் கல்வாரியும்

நிலவுக்கு விண்வெளி வீரர்கள் செல்லுமுன் அநேக பயிற்சிகள், கடினமான உடற்பயிற்சிகள் கொடுக்கப்படு கிறது அல்லவா?

அதுபோலவே, தேவனுடைய ராஜ்யத்திற்குச் செல்லு முன் அநேகசோதனைகள், நிந்தைகள், அவமானங்கள் வழி யாக தேவனுடைய பிள்ளைகளும் கடந்து செல்ல வேண்டிய திருக்கிறது.

அப்படி ஓர் பயிற்சிசாலைதான், ரஷ்யா நாட்டிலுள்ள சிறைச்சாலை! அங்கே ஓர் அருவருப்பான துர்நாற்றம் வீசும் ஓர் இருண்ட அறையில் சில கிறிஸ்தவர்கள் அடைக்கப்பட்டு வருடங்களைக் கடத்திக் கொண்டிருந்தனர். "மேன்மை யான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்" (எபி. 11: 35).

ஓர் நாள் அவர்கள் நற்கருணை (இராப்போஜனம்) எடுத்துக் கொள்ளவேண்டும் என ஆசைப்பட்டனர். ஆகவே அதற்கான ஆயத்தங்களை அவர்களுக்குள்ளேயே செய்தனர். அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் உணவு என்ன தெரியுமா? ஒரு வாரத்திற்கு ½ ரொட்டி மாத்திரமே! அதைக் கொண்டு அவர்கள் உயிர்வாழ வேண்டும். அப்படி கிடைக்கும் ரொட்டியிலும் ஒரு பகுதியை சேமித்து நற் கருணை ஆராதனைக்காக வைத்துக் கொண்டனர்.

சரி; அப்பம் கிடைத்து விட்டது; திராட்சை ரசத்துக்கு எங்கே போவது?

அருமை இயேசுநாதர் கானு ஊர் கலியாணத்திலே நீரை திராட்சை ரசமாக்கவில்லையா! ஜாடியிலே நிரப்பப்பட்ட அதே தண்ணீரானது தன்னை சிருஷ்டித்த தேவகுமாரன் பூலோகத்தில் வந்திருப்பதைப் பார்த்து பூரித்து அது தானாகவே திராட்சை ரசமாக மாறிவிட்டது! உண்மைதான்; தண்ணீரைப் போல தளும்பிக் கொண்டிருக்கும், எந்த நன்மையும் இல்லாதிருக்கும் அநேகர் இயேசு கிறிஸ்துவிடம் வந்தபோது அவர்களது குணங்கள் மேன்மையாக, திராட்சை ரசமாக மாற்றப்பட்டதே!

அதுபோல இந்த தண்ணீரையும் திராட்சை ரசமாக மாற்றும் என்று ஜெபித்து விட்டு ஆராதனையை ஆரம்பித்தார்கள்.

தரை முழுவதும் சக்தியும், மலமும், மூத்திரமும் இருந்தபடியினலே, ஒருவன் தரையில் குப்புறப்படுத்துக் கொண்டு, தனது முதுகை கர்த்தருடைய அப்பமும், ரசமும் வைப்பதற்குக் கொடுத்தான். சிலுவைப்பாடுகளை தியானித்தபடியே மற்றவர்கள் கர்த்தருடைய பந்தியை நிறைவேற்றினர்கள்; அனைவரும் புசித்தபின், தரையிலே படுத்து தனது முதுகைக் கொடுத்தவனும் புசித்துக் கொண்டான்.

அங்குக் கூடியிருந்த ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மீது தாங்கள் வைத்திருந்த அளவற்ற அன்பின் நிமித்தம் கைது செய்யப்பட்டவர்கள்! பல்வேறு இடங்களிலிருந்து வந்தவர்கள். சிறைச்சாலையில் ஆண்டுகள் பல உருண்டுவிட்டன. ஒருவருக்கும் தங்கள் பிள்ளைகளின் கதி என்னவாயிற்று என்று தெரியாது! தங்கள் மனைவிமார் சாப்பாடில்லாமல் எங்கே, எப்படி வாழ்கிறுர்கள் என்பது தெரியாது! தங்கள் மழலைச் செல்வங்கள், மனைவி, நண்பர்கள் நினைவுகள் அவர்களை பயமுறுத்திக் கொண்டேயிருந்தது! ஒவ்வொருவரும்

தங்கள் குடும்பத்தையும், எப்படி அவர்கள் தங்கள் ஆலயங்களில் 'ஒரு காலத்தில்' நற்கருணை எடுத்தார்கள் என்பதையும் நினைவுகூர்ந்து வேதனைப்பட்ட நிலையில் இருந்தனர். அவர்களைத் தேற்றும் பொருட்டு, அங்கிருந்த போதகர் 'ஸ்தேவானை'க் குறித்துப் பேசினார்!

ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்லும் பொருட்டு நகரத்துக்கு வெளியே கொண்டுவந்த வேளையில் அவனைச் சுற்றியிருந்தவர்கள் மூர்க்கமடைந்து அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள், அவன்மீது பாய்ந்தார்கள்!

ஸ்தேவானோ அவர்களைப் பார்க்கவில்லை; ஒருவேளை பார்த்திருப்பானானால் கலங்கிப்போயிருப்பான். தன் விசுவாசத்தில் தவறியிருப்பான்.

ஆனால் அவன் சூழ்ந்திருந்தவர்களைப் பார்க்கவில்லை; அவனது கண்கள் அவனது தெய்வத்தின்மீது இருந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்தான் என்று வேதம் சொல்லுகிறது. இயேசு கிறிஸ்துவை அவனது உள்ளமும் கண்களும் ஏறெடுத்துப் பார்த்தபடியினாலே, "வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் கண்டான்!" ஆ! எவ்வளவு மேன்மையான ஓர் சாட்சி!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஸ்தேவானை வரவேற்கும்படியாக எழுந்து நின்றார்! வேதத்தில் மற்ற இடங்களிலெல்லாம், இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்—என்றே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஓர் இடத்தில் மட்டும்தான் அவர் எழுந்து நின்றார் என்று வாசிக்கிறோம்.

தனக்காக உயிரைக் கொடுக்கும் தன் மகனை ஆவலோடு வரவேற்கும்படியாக தன் இரு கரங்களையும் நீட்டி எழுந்து நின்றார்!

ஆகவே, சூழ்நிலைகளைப் பாராமல், இயேசு கிறிஸ்துவையே பார்ப்போமாக! சீஷர்களும்கூட கடலில் அலைவீசி

கொந்தளித்தபோது, காற்று படகை கவிழ்ப்பது போல் வீசியவேளையில், கடலையும் காற்றையும் பார்த்துக் கலங்கி விட்டனர்; காற்றையும் கடலையும் உண்டாக்கினவர் தங்களோடு இருக்கையில் தங்களுக்கு ஒன்றும் நேரிடாது என்ற விசுவாசம் அவர்களுக்கு இல்லை.

இயேசுவின் இனிமையான முகத்தையே நீ நோக்கிக் கொண்டிருப்பாயானல் எப்படிப்பட்ட வேதனைகள் சூழ்ந்தாலும் நீ அஞ்சமாட்டாய்!

உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று அவர் வாக்குக் கொடுக்கவில்லையா?

அப்படியானல் நீ ஏன் பதறுகிருய்?

கல்வாரிப் பாதையில் நீ நடக்கிற வேளையில் உன் கண்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே நோக்கிக் கொண்டிருக்கட்டும்! உனக்கு முன் அவர் நடந்து சென்று கொண்டிருக்கிருர்! வலது புறமும் இடது புறமும் சாயாதபடி அவர் உன்னைக் காப்பார்! ஆமென்!!

அத்தியாயம் 11

கல்வாரிப் பாதையில் நிக்கொதேமு!

அந்தரங்கக் கிறிஸ்தவர்களுக்கு முன்னோடி, நிக்கொதேமு!

நாம் வெளிப்படையாக ஆலயங்களில் மனமாற கர்த்தரைப் பாடித் துதித்து, ஞாயிற்றுக்கிழமைகளில் வேதமும் கையுமாகக் காட்சியளிக்கிறோம்!

ஆனால் இந்த வாய்ப்பு பல நாடுகளில் இல்லை. அந்தரங்கத்திலே, கல்லறைகளின் மத்தியிலே ஒருவரும் அறியாதபடி கிறிஸ்துவை ஊக்கமாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் அவரது சீஷர்கள் வெளிப்படையாக அவரோடு இருந்தார்கள்; அற்புதங்களைச் செய்தார்கள். அப்பமும் மீனும் புசித்தார்கள்! ஆனால் நிக்கொதேமு இரகசியமாய்க் கிறிஸ்துவைப் பின்பற்றினான்!

சோதனை வேளை வந்தது! வெளிப்படையாக பின்பற்றின சீஷர்கள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். அந்தரங்கமாய்ப் பின்பற்றிய நிக்கோதேமு வெளிப்படையாய் வெள்ளைப் போளமும், கரியப் போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான். இயேசு கிறிஸ்துவின்மீது தான் வைத்திருந்த அன்பை வெளிப்படையாகக் காட்டினான் (யோ. 19:39).

யோவான் சுவிசேஷத்தில் மாத்திரம்தான், அதுவும் மூன்று இடங்களில் மட்டும்தான் நிக்கொதேமுவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். யோவான் 3 ஆம் அதிகாரம்; யோவான் 7:50-52; யோவான் 19:39.

யார் இந்த நிக்கொதேமு? அவன் ஒரு பரிசேயன்! (இயேசு சிலுவையில் அறையப்பட முக்கிய காரணமாயிருந்தவர்கள் பரிசேயர்தான்). அவன் யூதருக்குள்ளே அதிகாரியாயிருந்தான்; இஸ்ரவேலிலே போதகனாயிருந்தான்.

அவனது உள்ளத்திலே கிறிஸ்துவின் அன்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அவரது போதனைகள் மீது அளவில்லாத ஆர்வம்: அவரது முகத்தைத் தரிசிக்க மிகுந்த வாஞ்சை. வெளியிலே பரிசேயனாயிருந்த அவன், உள்ளத்திலே கிறிஸ்தவனாயிருந்தான்.

இரவு வேளையிலே இயேசுவின் பாதத்திலே வந்து அமர்ந்தான்; எவ்வளவு இனிமையான ஓர் அனுபவம்!

ஜெபம் பண்ணுவதின் முக்கிய நோக்கம்; அது வேண்டும் இது வேண்டும், சரீர சுகம் வேண்டும், ஆசீர்வாதங்கள் வேண்டும்; குடும்பத்தில் பிரச்சினைகள் தீர வேண்டும் என்பதற்காக அல்ல!

ஜெபம் பண்ணும் வேளை கிறிஸ்துவின் இனிய பிரசன்னத்தை உணருவதே மிகுந்த ஆனந்தம்! அவரது முகத்தை நோக்கிப் பார்ப்பதே உள்ளத்தின் பேரானந்தம்!!

இயேசுவைச் சந்திக்க நிக்கொதேமு ஓர் நேரத்தை ஒதுக்கி வைத்திருந்தான். இரவுவேளை! யாரும் காணாத, எந்த இடையூறும் இல்லாத, ஜன நெரிசல் இல்லாத நேரம். மற்ற பரிசேயருக்குப் பயந்ததாலோ, அல்லது இரவு வேளைகளில்தான் இயேசுவிடம் மனம்விட்டுப் பேசமுடியும் என்பதாலோ அந்த வேளையை அவன் தெரிந்தெடுத்தான்.

தனது சந்தேகங்களையெல்லாம் அவர் பாதத்தில் கொட்டினான். இயேசு கிறிஸ்து ஓர் அருமையான பிரசங்கத்தை அவனுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்; முழு வேதத்தின் சுருக்கமான சாராம்சம் யோவான் 3:16, அவனிடம் பேசும் போதுதான் வெளிவந்தது! மலையின்மீது நின்றும், படகில் நின்றும் பொதுமக்களுக்குப் பிரசங்கித்த நமது தேவன், தனி மனிதனுக்கும் தனிப்பட்ட ஓர் செய்தியைக் கொடுத்தார்!

இயேசுவின் பாதத்தில் அமர்ந்தது ஓர்இரவுமட்டும்தான்! ஆனால், அது அவன் வாழ்க்கையையே மாற்றி விட்டது!

எத்தனையோ பிரசங்கங்களைக் கேட்டும் நமது இருதயம் கர்த்தரை விட்டுத் தூரமாய் நின்று கொண்டிருக்கிறது.

நமது தேசத்தில் ஒருமுறைகூடக் கிறிஸ்துவையும், அவர் கொடுக்கும் நித்திய ஜீவனையும் குறித்துக் கேள்விப் படாத கோடிக்கணக்கான மக்கள் உண்டே! நீ இனி வாங்கு கிறவனாக அல்ல; சுவிசேஷத்தைச் சுமந்து செல்கிறவனாக இருக்க வேண்டும்; நீ அநேக ஜாதிகளுக்குக் கடன் கொடுக்கும் படியாக, அநேக ஜாதிகளின் தாகம் தீர்க்கிற வனாக கர்த்தர் உன்னை மாற்றுவாராக! ஆமென்.

இரண்டாம் முறை நிக்கொதேமுவை வேதத்தில் நாம் பார்க்கும் போது (யோவான் 7:50) அவன் பரிந்து பேசு கிறவனாக, இயேசுவுக்காக பரிசேயர் மத்தியில் குரல் கொடுப் பவனாகக் காண்கிறோம்.

கர்த்தருக்காகப் பேசும்படி ஓர் சந்தர்ப்பம் கிடைத்த வேளை அதை அவன் விட்டுவிடவில்லை. முழுமையாக பயன் படுத்திக் கொண்டான்.

பரிசேயரிடத்தில் பேசும்படி கர்த்தர் ஓர் பரிசேயனைத் தெரிந்தெடுத்தார். நாம் இருக்கும் இடத்தில், பணிபுரியும் அலுவலகங்களில் தேவனுக்குச் சாட்சியாக நிற்க வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்! நம் நிலை என்ன?

மூன்றாவது முறை இயேசு கிறிஸ்துவை எந்த நிலையில் கண்டான்?

கல்வாரிப் பாதை வெறிச்சோடிக் கிடந்தது! தேவாலயத்தின் திரைச் சீலை மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது! பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது, கல்லறைகளும் திறந்தது!

எங்கும் சோகமயம்! இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் எங்கே? உமக்காக ஜீவனையும் கொடுப்பேன் என்று மார்தட்டியவர்கள் எங்கே?

சீஷர்கள் சிதறடிக்கப்பட்டார்கள்! மகிழ்ச்சியில் ஒட்டிக்கொண்டவர்கள் அயரத்தில் ஓடிவிட்டார்கள்!!

அநேக ஸ்திரிகள் அங்கே தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

'எல்லோரும் ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன், என்று சொல்லியபடியே நிக்கோதேமு முன்னே வந்தான்! அவன் முகத்தில் ஓர் உறுதியிருந்தது! கோழையான அவனைக் கல்வாரி வீரனாக்கிவிட்டது! இனி அவன் அந்தரங்கக்கிறிஸ்தவனல்ல! வெளியரங்கமான சுவிசேஷ வீரன்! தன் நேசருக்காக, தனக்காக அடிபட்டவருக்காக, தனக்காகக் குத்தப்பட்டவருக்காக, தனக்காகச் சிலுவைப் பாடுகளை ஆனந்தமாக அனுபவித்தவருக்காக, தான் ஏதாவது செய்து ஆகவேண்டும்! வெள்ளைப் போளமும், கரியப் போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்! (யோவா. 19;39) தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டான்!"

இயேசு ராஜா! உமது நாமம் ஊற்றுண்ட பரிமளத்தைலம்! ஐயா, பாரெல்லாம் உம் நாமம் வாசனை வீசட்டும்!

"உம்மைப் பின் செல்வேன் என்சுவாமி
எனக்காக நீர் மரித்தீர்; மரித்தீர்;
எல்லோரும் ஓடினாலும்
உமதன்பால் நான் நிற்பேன்"

இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளையே! உனது அந்தரங்கஜீவியம் எப்படியிருக்கிறது? தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாயிருக்கிறதா? அவர் அந்தரங்கத்தைக் காண்கிற தேவன்; அவர் கண்கள் அக்கினி ஜுவாலையைப் போன்றவை!

பெயரையோ புகழையோ நாடாதே! சபையில் முதல் வருக விரும்பாதே! மனிதன் காணவேண்டாம்! அந்தரங்கத்திலே, இரவு வேளைகளிலே, அதிகாலையிலே தேவனோடு நெருங்கி ஜீவியம் செய்! கம்யூனிஸ்ட் நாடுகளில் இரத்த சாட்சிகளாக நிற்கும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் உனது இருதயத்தைக் கிழித்து, பெருமூச்சோடும், கண்ணீரோடும் ஜெபி! அந்தரங்கத்தில் ஜெபி! ஒருவரும் காணாதபடி சேரிகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், ஜெயில்களிலும் போய் சுவிசேஷத்தை அறிவி! அந்தரங்கத்தில் உனது ஊழியம் இருக்கட்டும். மனுஷனைப் பிரியப்படுத்தாமல், ஒவ்வொரு விநாடியும் கர்த்தரைப் பிரியப்படுத்தவும், அவரது தாகத்தைத் தீர்க்கவும், கிறிஸ்துவின் கண்ணீரைத் துடைக்கவும் உன்னை ஒப்புக் கொடுத்துவிடு!

நீ எந்த வேலையைச் செய்தாலும் உன் உள்ளத்தின் ஆழம் இயேசுவோடு தரித்திருக்கட்டும்!

உயர்ந்த மலையின் அடிப்பாகத்தில் காற்று வீசும்; புயல் எழும்பும்; காட்டு மிருகங்கள் நடமாடும்; ஆனால் மலை உச்சியோ எப்பொழுதும் மேகங்களோடு உறவாடிக் கொண்டிருக்கும்; சூரியனின் மகிமையான ஒளி அங்கே வீசிக் கொண்டிருக்கும்.

நமது வெளிப்புறமான வேலையும், அந்தரங்க ஜீவியமும் இப்படியே இருக்கட்டும். அந்தரங்கத்தை காண்கிற தேவன் வெளியரங்கமாய் பதிலளிப்பார்! ஆமென்.

அத்தியாயம் 12

மூளையைக் கலக்கி சலவை செய்பவர்கள்

பெதஸ்தா குளம் சில சமயங்களில் கலங்கும்! தேவ தூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனா யிருந்தாலும் சொஸ்தமாவான் (யோவா. 5:1-4).

தண்ணீர் கலங்குகிற வேளையில் வியாதிகள் சுகமாகும்! தேவனுடைய ஜனங்கள் உபவாசத்திலும் ஜெபத்திலுமிருந்து உலகத்தைக் கலக்குகிற வேளையில் ஆத்துமாவிலிருந்த பாவம் நீங்கி, மக்கள் இரட்சிப்படைவார்கள்! பவுல் தெச லோனிக்கே பட்டணத்திற்கு வந்தபோது அங்குள்ள யூதர்கள் உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் என்று கூக்குரலிட்டார்கள் (அப். 17: 9).

அப்படியே, எதிராளியான பிசாசானவன், ஜனங்கள் இரட்சிக்கப்படாதபடிக்கு, சுவிசேஷம் பரவாதபடிக்கு தேவனுடைய ராஜ்யம்விரிவடையாதபடிக்கு, சபைகளையும், விசுவாசிகளையும், ஊழியர்களையும், தனதுமுழு பெலத்தோடு கலக்கி வருகிறான். இன்னும் கொஞ்சக் காலம் மாத்திரம் உண்டு என்று அறிந்து, தேவனுடைய பிள்ளைகளை அவரது அன்பிலிருந்து பிரிக்கும்படி, சோதனைகளையும், கொந்தளிப்பு களையும், கலக்கங்களையும் அடுத்தடுத்துக் கொண்டுவருவான்

இதை அறிந்தே எமது இயேசுராஜா, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்" (யோவா. 14:1) என்று தமது சீஷர்களிடம் அறிவுறுத்தினர்!

சத்துருவின் பயங்கரமான ஆயுதமான கம்யூனிஸ்டுகள், கிறிஸ்தவர்களைக் கலக்குவதில் முழுமூச்சோடு ஈடுபட்டிருக்கிறார்கள்.

பெற்றோரைவிட்டுப் பிள்ளைகளையும், கணவனைவிட்டு மனைவியையும் பிரித்து, குடும்பத்தைக் கலக்குவது முதல்படி! சிறைவாசமும், சவுக்கடிகளும் இரண்டாவதுபடி!! நிர்வாணமும், பட்டினியும், நிந்தையும் மூன்றாவதுபடி... ஒருவனது காதுகளை அறுத்து அவனையே சாப்பிடச் சொல்லுவதும், மூத்திரத்தையே வருடக் கணக்கில் கிறிஸ்தவக் கைதிகளைக் குடிக்க வைப்பதும் அங்கு தினசரிக் காட்சிகள்.

எந்தச் சூழ்நிலையிலும் கலங்காமல்- கிறிஸ்துவை மறுதலியாமல்- அவரது அன்பில் நிற்கும் பரிசுத்தவான்களாகிய இரத்தச் சாட்சிகளைக் கலங்கடிக்க நினைக்கும் சத்துருவின் கடைசிப் போராயுதம்தான், மூளையைக் கலக்கிச் சலவை செய்வது!

அதைக் கேட்டாலே உள்ளம் நடுங்குகிறது! எழுதுவதற்கு கை வருவதில்லை! இனி இயேசு கிறிஸ்துவைத் துதித்துப்பாடமுடியாதபடி, சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவியாதபடி, கிறிஸ்தவர்களின் மூளையை- நினைவைக் கலைத்துப் பைத்தியக்காரர்களாக மாற்றிவிடுவதுதான் அவர்களது திட்டம்.

பல ஆண்டுகள் சிறையிலேயே வாழ்ந்து சூரியனைக் காணமுடியாதபடி இருண்ட தனிச்சிறையில் அடைக்கப்பட்டு எலும்பும் தோலுமாக, கண்கள் சொருகி, உதடுகள் உலர்ந்து உடலெல்லாம் தழும்புகளோடு காணப்படும் அந்த தேவனுடைய பிள்ளையை நடத்திக் கொண்டுவந்து ஓர் சிறிய

 G. B. Sathyanesan, B.A

பீரோவுக்குள்ளே நிறுத்தி வைப்பார்கள். கைகள் விலங்கிடப் பட்டிருக்கும் அதிலே நிற்க மாத்திரம் முடியுமே ஒழிய, நகரவோ உட்காரவோ முடியாது.

தலைக்கு மேலேயிருந்து குளிர்ந்த பனிக்கட்டித் தண்ணீர் தலையிலே கொட்டிக் கொண்டிருக்கும். உடல் குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கும். ஒன்றும் சாப்பிடாததால் பசி சாதுகளை அடைக்கும்.

ஒரு நம்பிக்கையும் இல்லாத நிலையிலே, ஆறுதல் சொல்ல உலகில் யாரும் இல்லாத சூழ்நிலையில் வாழ்க்கையே வெறுமையான பாலைவனமாக, அவன் நின்று கொண்டேயிருக்க வேண்டும்.

காதிலே ஒலிபெருக்கி **(Loud Speakers)** இருபுறமும் பொருத்தப்பட்டிருக்கும். அது மெதுவாக ஆரம்பித்து போகப்போக சத்தம் போட ஆரம்பிக்கும்.

இயேசு கிறிஸ்து முட்டாள்
இயேசு கிறிஸ்து முட்டாள்
இயேசு கிறிஸ்து முட்டாள்

என்று இடைவிடாமல்இரவும்பகலும் அலறிக்கொண்டேயிருக்கும். மெதுவாக சொல்ல ஆரம்பித்து நேரம் செல்லச் செல்ல மிகவும் சத்தமாக முழங்கிக் கொண்டேயிருக்கும். திடீரென்று நிறுத்துவார்கள். மீண்டும் அதே பல்லவி... அதே கூச்சல்! செவிப் பறையைக் கிழிக்கும் பயங்கரமான அலறல்!

பசியின் மயக்கத்தால் தாங்கமுடியாத வேதனைகளோடு அதையே கேட்டுக் கேட்டு மூளை கலங்க ஆரம்பிக்கும். பின்னால் மற்ற பாடல்

கம்யூனிசம் நல்லது
கம்யூனிசம் நல்லது
கம்யூனிசம் நல்லது

என்று இடைவிடாமல் ஒலித்துக்கொண்டேயிருக்கும். காலை, பகல்வேளை, மாலை, இரவு இதே பயங்கர சத்தம்தான். செவியடைக்கும்; மூளை கலங்கும்: அந்தக் கைதியை பீரோவிலிருந்து வெளியே எடுக்கும் வேளையில் அவன் உதடுகள் இயேசு முட்டாள், இயேசு முட்டாள் என்று முணுமுணுத்துக் கொண்டேயிருக்கும். இனி அவனது மூளை அவனுக்கு பயன்படாது; அவன் குடும்பத்திற்கும் பயன்படாது. அவன் தன் சிந்தனை சக்தியை என்றென்றுமாக இழந்துவிடுகிறான். இனி அவன் கிறிஸ்தவனல்ல; அவன் பைத்தியக்காரன். எவ்வளவு பயங்கரமான நிலை பாருங்கள்!

இப்படிப்பட்ட ஓர் சூழ்நிலை ரிக்சர்ட் உம்பிராண்ட் என்ற போதகருக்கு ஏற்பட்ட வேளையில் அவர் அதற்கு ஓர் மாற்று மருந்தைக் கண்டு பிடித்தார்!

"உலகத்திலிருப்பவரைக் காட்டிலும் உங்களிருப்பவர் பெரியவர்" என்ற வாக்குத்தத்தமே அது!

ஒலிபெருக்கிகள் "இயேசு முட்டாள்" என்றும் "கிறிஸ்தவ மதம் செத்த மதம்" என்று மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால், அவரது உள்ளத்தில்....

இயேசு ஜீவிக்கிறார்; இயேசு வல்லவர்!
இயேசு ஜீவிக்கிறார்; இயேசு வல்லவர்!
இயேசு ஜீவிக்கிறார்; இயேசு வல்லவர்!

என்று தனக்குஇருந்த கொஞ்சம் பெலத்தோடு வைராக்யமாக மாறிமாறிச் சொல்லிக் கொண்டேயிருந்தார்! ஒலிபெருக்கிக்கும்— அவருக்கும் ஒரு மாபெரும் போராட்டம்.

ஒலிபெருக்கியைவிட தன்னில் இருப்பவர் பெரியவர் என்ற உறுதி அவருக்கு! இயேசு கிறிஸ்து ஒரு அருமையான வாக்குத்தத்தத்தை லூக்கா 10:19ல் சொல்லியிருக்கிறார். ஆ! எவ்வளவு வல்லமையான வாக்குறுதி அது!

"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும்

உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது''

'சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளும்' இந்த வாக்குத்தத்தத்தில் அந்தப் போதகர் அடைக்கலம் புகுந்தார்.

மூன்று நாட்களுக்குப்பின் வெளியே வந்தார்! அவர் புத்தி கலங்கவில்லை. மூளை சலவை செய்யப்படவில்லை. உயிர்த்தெழுந்த வல்லமையால் ஜெயம் பெற்றார். அல்லேலூயா!

''கிறிஸ்தவ மதம் செத்த மதம்; கிறிஸ்தவ மதம் செத்த மதம்'' என்று மாறிமாறி அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட, நான் அந்த செத்த மதத்தின்மீது வாஞ்சையும் நம்பிக்கையுமாயிருந்து அது உயிரோடு எழும்பும்வரை அந்த கல்லறைக் கண்ணீரால் நனைப்பேனே ஒழிய, மறுதலித்து ஓடமாட்டேன்!

'மகதலேனா மரியாள்' ஒரு உயிர்ப்பிக்கும் உதாரணமாகத் திகழ்கிறாள்! எல்லோரும் மறுதலித்துப்பின் வாங்கிய நிலையிலும், இருள் சூழ்ந்த வேளையிலும், இயேசு கிறிஸ்து, ''என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று கதறிய வேளையிலும், அவள் அவரைவிட்டுப் பிரியவில்லை. அவளது வில் உறுதியாக நின்றது'' அவரது கல்லறையில் விடாமல் அழுது கொண்டே நின்றாள். அவரை வைத்த இடத்தைச் சொல்லும் நான் போய் அவரை எடுத்து கொள்வேன்'' யோவான் 20:15.

''அவர் செத்துப் போயிருந்தாலும், அழுகியிருந்தாலும் அவர்தான் எனக்கு வேண்டும்'' என்ற உறுதி மகதலேனாமரியாளுக்கு இருந்தது. அல்லேலூயா! கர்த்தர் அவளை கௌரவித்தார். உயிர்த் தெழுந்தும் முதல் தரிசனம் அவளுக்குத்தான்! என்ன ஆனந்த பாக்கியம்! அல்லேலூயா!

அத்தியாயம் 13

சிலுவையை நோக்கி இராஜ நடை

"உன்னை வெறுத்துவிடு; சிலுவையை எடுத்துக் கொள்; என்னைப் பின்பற்று" (மத். 16:24).

இயேசு கிறிஸ்துவின் இந்த அழைப்பு அநேகருக்கு கசப்பாக இருக்கிறது. கடினமான உபதேசம் என்று சொல்லுகிறார்கள்! கிருபையான இந்த அழைப்பை உதறிவிட்டு, மனம்போன போக்கில் வாழ்ந்துவிட்டு, கிறிஸ்துவின் சமூகத்தில் வரும் வேளை, அவர், "சபிக்கப்பட்டவர்களே!... நித்திய அக்கினிக்குப் போங்கள்" மத். 25:41 என்று சொல்வாரானால் உன்னால் தாங்கிக் கொள்ளமுடியாது!

இயேசுவோடு சிலுவை சுமப்பவர்கள்; அவர் நிமித்தம் நிந்தைகளையும், துன்பங்களையும் பலவிதமான தீமையான மொழிகளையும் மகிழ்ச்சியோடு சகிப்பவர்கள்: ஆனந்தமாய் அவரோடு அரசாளுவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலைமேலிருக்கும்.

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1 கொரி. 1:18). ஆம்! தேவனுடைய பிள்ளைகளுக்குக் சிலுவை தேவ பெலனாகும்; அரண்களை நிர்மூலமாக்கும் தேவ பெலன்.

நமது இயேசு நியாயாதிபதியாக ஆகாயத்தில் வரும்பொழுது, சிலுவையின் பாதையில் உத்தமமாய் நடந்தவர்கள்; ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தவர்கள்; கிறிஸ்துவுடனே கூட

சிலுவையில் அறையப்பட்டேன் என்று கூறும் பரிசுத்தவான்கள், ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பார்கள்!

சகோதரனே! நீ ஏன் கல்வாரிப் பாதையில் உன் சிலுவையை எடுத்துக் கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றக் கூடாது? என்ன தடை?

நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று அவர் சொல்லவில்லையா? சிலுவையின் வழியே அல்லாமல் நித்திய ஜீவனுக்கு வேறு வழிகள் இல்லை. கல்வாரிப் பாதையே இரட்சிப்பின் பாதை! சிலுவையிலே நித்திய ஜீவன் உண்டு; சத்துரு உன்னை நெருக்குகிற வேளையிலே சிலுவைதான் உன் அடைக்கலம்! சிலுவையிலே ஆத்துமாவுக்குப் பெலன் உண்டு! சிலுவையிலே பரிசுத்தாவியின் மகிழ்ச்சி உண்டு! சிலுவையிலே பரிசுத்தத்தின் பூரணம் உண்டு! சிலுவையிலே இளைப்பாறுதலும் நம்பிக்கையும் உண்டு!

சிலுவையை எடுத்துக்கொண்டு; இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நித்திய ஜீவனின் பாதையில்உன் கால்களை உறுத்திப்படுத்திவிடு!

உனக்கு முன்பாக சிலுவையைச் சுமந்தவண்ணம் இயேசு கிறிஸ்து போய்க் கொண்டிருக்கிறார்! அவர் உன்னைக் காப்பார்!!

உனக்குச் சிலுவையைச் சுமக்க பெலன் தரும்படி அவர் உனக்காக சிலுவையில் மரித்தாரே! உன் பாவங்களையும் சாபங்களையும் மன்னித்தாரே!

கிறிஸ்துவோடு நீ மரிப்பாயானால், கிறிஸ்துவோடு எழுந்திருப்பாய்! அவரது பாடுகளில் நீ பங்கு பெறுவாயானால் அவரது மகிமையிலும் பங்கடைவாய்!! பேதுருவோடு கர்த்தர் சொன்ன கடைசி வார்த்தைகள்:—

"நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரை கட்டிக்கொண்டு உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய், நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக்கட்டி,

உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்குக் கொண்டு போவான். என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்'' என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறான் என்பதைக் குறிக்கும் படியாக இப்படிச் சொன்னார்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிலுவைப் பாதையைக் கர்த்தர் வைத்திருக்கிறார்! சில வேளைகளில் சரீரத்தில் பாடு களையும், வேதனைகளையும், மாம்சத்தில் வியாதியையும் சகிக்க வேண்டியது வரும். சில வேளைகளில் ஆவியிலே கலக் கமும், ஆத்துமாவில் கசப்புமாக இருக்கும்! நீயே உனக்குச் சுமையாகவும், ஒருவருக்கும் பிரயோஜனமில்லாத அகாலப் பிறவியுமாகத் தோன்றுவாய்! சில வேளைகளில் கர்த்தரே கைவிட்டதுபோல், நிர்ப்பந்தமான நிலைமைக்குள் கடந்து செல்ல வேண்டியதிருக்கும்,

''ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன்வாழ்நாள் குறுகின வனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்'' யோபு 14:1.

சோதனைகளில் தவிக்கிற மக்களை யாக்கோபு அருமை யாகத் தேற்றுகிறார்; ''என் சகோதரரே, நீங்கள் பலவித மான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத் தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கு மென்று அறிந்து, அவை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்'' (யாக். 1: 2, 3).

ஆம்! சோதனை பொறுமையை உண்டாக்கும். சோதனை களைப் பொறுமையோடு சகிக்கிறவன் பாக்கியவான்! நீ சிலுவையைப் பொறுமையோடு, உற்சாகத்தோடு சுமப் பாயானால், அது உன்னைச் சுமந்து நீ விரும்பும் ஆனந்த பாக்கியத்திற்குள் அழைத்துச் செல்லும். அங்கே அவர் களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்! இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை.

நீ சிலுவையை முறுமுறுப்போடு; விரும்பாமல் சுமந்தால் அந்த சிலுவை உனக்கு மிகுந்த பாரமாய்க் காணப்படும்! நீ ஒரு சிலுவையைப் புறக்கணிக்க நினைத்தால், வேறு ஒரு

சிலுவை வந்துசேரும். அதிக கனமாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

கிறிஸ்து சிலுவை சுமந்தார்; அவரது சீஷர்கள் சுமந்தார்கள்; பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் புதியேற்பாட்டுப் பரிசுத்தவான்கள் சுமந்தார்கள்; தீர்க்கதரிசிகள் சுமந்தார்கள். இதை இயேசு கிறிஸ்துவே தமது சீஷர்களிடம் விவரித்தார்!

"கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியிருக்கிறவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (லூக். 24: 26, 27).

கிறிஸ்துவே பாடுபட வேண்டியதிருந்தால், அவர் நடந்த வழியை விட்டுவிட்டு நீ ஏன் ஓர் உல்லாச பாதையை நாடுகிறாய்?

இயேசு கிறிஸ்துவின் முழு வாழ்க்கையும், ஊழியத்தின் வாழ்க்கை! உழைப்பின் வாழ்க்கை! ஜெபத்தின் வாழ்க்கை! ஜெயத்தின் வாழ்க்கை! மலையில் ஏறி ஜெபித்தார்: வனாந்திரத்துக்குப் போய் ஜெபித்தார்; படகின்மேல் நின்று பிரசங்கித்தார். மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்த ஜனங்களைக் கண்டு மனதுருகினார்; பரிதபித்தார்; கண்ணீர் விட்டார்... அவரது வாழ்க்கையில் உல்லாசமாக, ஆனந்தமாக பொழுதைப் போக்கின நாட்கள் இல்லை! ஒன்றுகூட இல்லை!!

இரட்சிக்கப்பட்ட நாட்களில் ஜெபம் பண்ணினால் உடனே கேட்டதெல்லாம் கிடைக்கும்; வியாதிகள் சுகமாகும்; அற்புதங்களும் அடையாளங்களும் அனுதினமும் நடக்கும். ஆனால் போகப்போக உன்னை விசுவாசத்தில் பழக்கும்படியாக, படிப்படியாய்ச் சிலுவையை உன் தோள்களில் சுமத்துவார்! பயந்துவிடாதே! கடலையும் காற்றையும் அதட்டின தேவன் உன்னோடுகூட இருந்து நீ அறியாத வண்ணம் உன்னைக் கவனித்துக் கொண்டேயிருப்பார்!

நீ தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டும்! உனது ஒவ்வொரு காலடிகளையும் வைக்கும்போது, "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன், "நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயித்த திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே கல்வாரிப் பாதையில் பொறுமையோடு நடப்பாயாக!

"கழுகு தன் கூட்டைக் கலைத்து தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்து கொண்டு போகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை நடத்தினார்" (உபா 32:1)

கழுகு தன் கூட்டினைக் கலைப்பது ஏன்? குஞ்சுகளுக்குக் கெடுதல் செய்யவா? இல்லை! உன்னதமான இடங்களில் பறக்கப் பழக்குவிப்பதற்காக!

சிலுவைப் பாடுகள் ஏன்? ஆவிக்குரிய உன்னதமான நிலையை அடையும்படியாகவும், இயேசு கிறிஸ்துவை மாத்திரம் உறுதியாகப்பற்றிக் கொள்ளும் மனதை உருவாக்கவும், உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரச் செய்யும்படியாகவும் கொடுக்கப்படும் பயிற்சியே சிலுவைப்பாடுகள். ஆமென்! அல்லேலூயா!

யோபுக்கு இந்த நம்பிக்கை இருந்தது. "அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளக்குவேன்" [யோபு 23;10] என்று உற்சாகத்தோடு மார்தட்டி முழங்குகிறார்,

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்" அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்" (யாக்.1:12)

அத்தியாயம் 14

கல்வாரிப் பாதையில்...
சாது சுந்தர் சிங்

இந்தியா தேசம் உருவாக்கிய கிறிஸ்துவின் வீரர்களுக்குள் விசேஷமானவர் சாது சுந்தர் சிங்! கிறிஸ்துவுக்காக பாடனுபவிப்பதையே தன் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக கொண்டவர். இவர் இருண்டு கிடந்த இந்திய தேசமெங்கும் நடந்து திரிந்து இயேசுவின் அன்பின் விதைகளை விதைத்து தேசத்தையே கலக்கினவர்! கால்களில் செருப்பு கூட அணியாது காவியை உடுத்தி, தாடியை வளர்த்து, உலகத்தை வெறுத்து, வாழ்ந்த நாளெல்லாம் இவர் இயேசுவோடு வாழ்ந்தார்; இயேசுவோடு நடந்தார்; இயேசுவுக்காக சிலுவையை சுமந்தார்.

பக்தி வைராக்கியமான சீக்கிய குடும்பத்தில் பிறந்த இவர், தற்செயலாக புதிய ஏற்பாட்டை வாசிக்கிற வேளையிலே கிறிஸ்துவின் அன்பு அவரைத் தொட்டது. மறுபடியும் மறுபடியும் வாசிக்க வாசிக்க அவர் உள்ளம் முழுவதுமாய் இயேசுவின் பாதத்தில் சரணடைந்தது. "இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காகவும்.... அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிவதற்கும் எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" (பிலி. 3:8-10) என்று பவுல் அப்போஸ்தலனோடு கூட சேர்ந்து சொன்னார்.

தகப்பனார் மிரட்டினார், அடித்தார், பண ஆசை காட்டினார். கடையில் ஓர் இளம் பெண்ணை அழைத்துவந்து சாதுவின் முன் நிறுத்தி திருமணம் செய்துகொள்ள கோரினார். “அப்பா, எனக்கு ஒரே ஒரு இதயம்தான் உண்டு. அதை முழுவதுமாக இயேசு கிறிஸ்துக்கு கொடுத்துவிட்டேன்; எந்தப் பெண்ணுக்கும் அதில் இடம் இல்லை” என்று திட்டமாகச் சொல்லிவிட்டார்!

யோபு சொல்லவில்லையா? “என் கண்களோடே உடன்படிக்கைப் பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?” [யோபு 31:1]

பரிசுத்த பவுல் சொல்லுகிறாரே! “கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். [கலா 5:24]

இயேசுவை மாத்திரம் பிரியப்படுத்தவும், தன் முழு பெலத்தோடு ஊழியம் செய்யவும் உறுதிசெய்து கொண்ட இவர், இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்தே ஊழியம் செய்தார்!

ஒருமுறை சுந்தர் சிங், திபெத்திலுள்ள ராசார் என்ற பட்டணத்திற்கு வரும்போது அவரைப் பிடித்து அடித்து அங்குள்ள பிரதம லாமாவின் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அங்கே அவருக்கு மரண தண்டனைவிதிக்கப்பட்டது. திபெத்திலே கிறிஸ்தவர்களைக் கொல்ல சித்திரவதை செய்ய பல முறைகளைக் கையாள்வார்கள்.

பெரிய எருதுவின் ஈரமான பச்சைத் தோலிலே கிறிஸ்தவர்களை வைத்துச் சுற்றி இறுக தைத்து வெயிலிலே போட்டுவிடுவார்கள். தோல் காய்ந்து சுருங்குகிற வேளையிலே, உள்ளே இருக்கும் மனிதனின் எலும்புகள் நொறுங்கி துடித்துத் துடித்துச் சாவான்.

ஆனால் சாது சுந்தர் சிங்கை ஊருக்கு வெளியே கொண்டுவந்து, நிர்வாணமாக்கி ஓர் ஆழமான தண்ணீரற்ற கிணற்

றில் போட்டுவிட்டார்கள். கிணற்றின் வாயைப் பத்திரமாக மூடிவிட்டுப் போய்விட்டார்கள்.

சுந்தர் சிங் ஆழமான கிணற்றின் அடியில் விழுந்ததும் அவரது வலது கரம் பயங்கரமாகக் காயம்பட்டது!

அருவருப்பான துர்நாற்றம் கிணற்றில் வீசிக்கொண்டிருந்தது. அழுகிய நிலையில் பிணங்களும், எலும்புகளும், மண்டை ஓடுகளும் நிறைந்திருந்தது. எத்தனையோ பக்தர்களின் முடிவு இதுதானோ? என்று எண்ணவேண்டியதாயிற்று. சுவாசிக்க முடியாதபடி, வாந்தி வருவதுபோல், இருண்ட கிணற்றுக்குள் தவித்துக்கொண்டிருந்தார்! எங்கு பார்த்தாலும் அழுகின ஓடும் மாம்சமும்தான். "ஏன் என்னைக் கைவிட்டீர்! ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று அலறினர்.

பகல் கழிந்தது சூரியன் மறைந்து கொண்டான்.
இரவு வேளை வந்தது. பசி மயக்கம் ஓர் புறம். நித்திரையில்லாதது ஓர் புறம். குடிக்கத் தண்ணீரில்லாதது இன்னும் வேதனையைக் கூட்டியது. பிணங்களின் நாற்றம் மூச்சையடைத்தது! இப்படியாக, மூன்று பகல் பொழுதையும், இரவு பொழுதையும் கடத்தினர்! நம்பிக்கையிழந்த சாது மூன்றும் இரவில் தெய்வத்திடம் மன்றாடிக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று கிணற்றின் மேற் பாகத்தில் ஓர் சத்தம் கேட்டது! பூட்டைத் திறக்கும் சத்தமும் இரும்புக் கதவை இழுக்கும் சத்தமும் தான் அது ஓர் கயிறு மேலிருந்து சாது சுந்தர் சிங்கை நோக்கி வந்தது. உற்சாகத்துடன் கயிற்றைப் பிடித்துக் கொண்டார். கயிறு மேலே இழுக்கப்பட்டது. பத்திரமாக கிணற்றைவிட்டு வெளியே வந்தார். வெளியே வந்ததும் சுந்தர்சிங் தம்மைக் காப்பாற்றின ஆளைத் தேடினர். யாரையும் காணோம். காயம்பட்ட கையின் வேதனையும் நீங்கிவிட்டது.

தன்னைக் காத்தவர் இயேசு கிறிஸ்து என்று அறிந்து கொண்டார். இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை.

தூங்குகிறதுமில்லை! உண்மைதான்! சாது சுந்தர் சிங் மறுபடியும் பிடிக்கப்பட்டு அதே லாமாவின் முன் மீண்டும் நிறுத்தப்பட்டார்! லாமாவுக்கு ஒரே ஆச்சரியம். கிணற்றின் சாவி அவனது இடைக் கச்சையிலேயே பத்திரமாக இருந்தது. தெய்வம்தான் காப்பாற்றியிருக்கவேண்டும் என்று பயந்த லாமா, உடனே சுந்தர் சிங்கை தன் எல்லையைவிட்டுப் போய்விடும்படி கேட்டுக்கொண்டான்.

சாது சுந்தர்சிங்கின் நண்பரும், இயேசுவின் சுவிசேஷகருமாயிருந்த கர்த்தார் சிங் இதே லாமாவிடம் சிக்கியவேளை அவரைப் பிடித்து எருமையின் பச்சைத் தோலிலே கட்டி வெயிலிலே போட்டார்கள். தோல் காய ஆரம்பித்தது. கர்த்தார் சிங்கின் உடல் இறுக ஆரம்பித்தது. மூன்று நாட்களில் அவரது சரீரம் கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி எலும்புகள் முறிவடைந்தது. மரணத்தோடு ஊசலாடும் நேரம் தனது வலதுகையினால் தரையில் சில காரியங்களை எழுதினார்.

"கிறிஸ்துவிடம் நான் ஜீவன் பெறக்கேட்பது, அவருக்கு ஜீவனைக் கொடுப்பதற்காகவே."

"இந்துப் பெண்கள் தங்கள் கணவன்மார் இறந்ததும் உடன்கட்டை ஏறி தீயில்விழுந்து உயிரை மாய்த்துக்கொள்கிறார்களே! அவர்கள் தங்கள் புருஷன்மீது வைத்திருக்கும் அன்பைக் காட்டிலும் நான் என் இயேசு பெருமானின்மீது வைத்திருக்கும் அன்பு பலமடங்கு பெரியது!"

"அவர் எனக்குத் தந்த உயிரைத்தான் அவருக்கு கொடுக்கிறேன். இதில் பெருமைபாராட்ட இடமில்லையே!"

"இது என் மரணப் படுக்கையல்ல! மரணத்தின் மரணப் படுக்கை" என்று எழுதிக் கொண்டே தன் ஜீவனை விட்டார்!

இந்தியர்கள் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காகப் பலவழிகளைக் கையாண்டார்கள்.

பெரிய பானைகளில் போட்டு வாயை மூடிவிடுவது; காற்றுமில்லாமல் சாப்பாடுமில்லாமல் உயிர்விடும்படியாக!

கால்களைக் கயிற்றில் கட்டி தண்ணீருள்ள கிணற்றுக்குள் தலைகீழாக இறக்குவார்கள். முகம் முதலில் தண்ணீரில் இறங்கும். தண்ணீர் மூக்கினுள் ஏறி மூச்சு அடைக்கும். துடிக்கும் வேளையில் தலையை வெளியே எடுப்பார்கள்; மீண்டும் தண்ணீரில் மூழ்க வைப்பார்கள். இப்படியாக சித்திரவதை செய்து, செய்து அவனைத் தண்ணீர் குடிக்க வைத்து மூச்சுத் திணரும்படி சாகடிப்பார்கள்.

பழுக்கச் சூடாக்கிய இரும்புக் கம்பிகள், ஆணிகள் சரீரத்தில் குத்தப்படும்; விரல்களில் நகக் கணுக்கள் முன் களினால் ஆழமாகக் குத்தப்படும்.

சாது சுந்தர் சிங் பற்றிய புத்தகங்களில் சித்திரவதை களைப் பற்றி ஏராளமாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால் சாது சுந்தர் சிங்கின் முடிவு ஓர் மர்மமாகவே இருக்கிறது. எங்கே இறந்தார், எப்படி இறந்தார் என்பது யாருக்கும் தெரியவில்லை இரத்தச் சாட்சியாக மரித்திருப்பார் என்றே எல்லோரும் நினைக்கிறார்கள்.

இவ்வளவு ஒரு பெரிய பக்தனும், சுவிசேஷ வீரனும் நம் தேசத்தில் எழுந்தது, இயேசு கிறிஸ்து நம் தேசத்தில் பாராட்டின கிருபையே ஆகும். ஆயினும் நம் தேசம் முழுவதும் இன்னும் இரட்சிக்கப்படவில்லையே. "என் காரிய மாக யார் போவார்" என தேவன் அங்கலாய்க்கும் சத்தம் உன் காதுகளில் கேட்கிறதா?

அத்தியாயம் 15

கல்வாரிப் பாதையில் ...
சீஷர்கள்

எத்தியோப்பியன் தன் தோலை மாற்றக் கூடுமோ?

சிவிங்கி தன் புள்ளியை மாற்றி அமைக்குமோ?

அவாந்திர வெளிகளில் ஆறுகள் உண்டாகுமோ?

வனாந்திரங்களில் வழிகள் பிறக்குமோ?

மலைகள் ஆட்டுக்குட்டிகளைப் போலத் துள்ளுமோ?

கற்பாறை போலுள்ள உள்ளம் மெழுகுபோல் உருகுமோ?

கல்வாரி தரும் பதில் என்ன, ஆம், ஆம் என்பதே சட்டமும் சமுதாயமும் திருத்த முடியாத கள்ளன் கல்வாரிக்குவந்து தன்னை ஒப்பு கொடுத்தபோது பரதீசைப் பெறும் பேற்றைப் பெற்றான்.

சாதாரண நிலையிலிருந்து வந்த சீஷர்கள் கல்வாரி அண்டை வந்தபோது நெருப்பிலே புடமிட்ட பொன்னைப் போலப் பிரகாசித்தனர்!

உன்னை விசேஷமுள்ளவனாக்குகிறவர் யார்?

இயேசு கிறிஸ்து அல்லவோ?

உன்னை விசுவாச வீரனாக்குகிறது எது?

கல்வாரி அல்லவோ?

உன்னை பரிசுத்தமாக்குவது எது?

கிறிஸ்துவின் இரத்தம்தானே?

சிலுவையில் இயேசுவின் முகத்தைத் தியானித்தவர்கள் கோழைகளாக வாழ்ந்ததில்லை! தேவ குமாரனாகிய இயேசு, தங்களுக்காகப்பாடு அனுபவித்து, துக்கங்களைச் சுமந்து, வாதிக்கப்பட்டு, நொறுக்கப் பட்டதை முக முகமாய் பார்த்த சீஷர்கள் முழுமையாக மாற்றப்பட்டார்கள்; சுவிசேஷ வீரர்களானார்கள்! தைரியமாய் சத்தியத்தை அறிவித்தனர்! "இயேசுவைத் தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" [அப் 2;32] என்று முழங்கினார்கள்.

இயேசு கிறிஸ்துவுக்காக, அடிக்கப்படுவதையும் இயேசு கிறிஸ்துவுக்காக ஜீவனைக் கொடுப்பதையும் தங்களுக்குக் கிடைக்கும் பெரிய பாக்கியமாகக் கருதினார்கள், கல்வாரிப் பாதை அவர்களுக்கு ஆனந்த பாக்கியமாக இருந்தது!

பவுலையும், சீலாவையும் அநேக அடிகள் அடித்த பின்பு உட்காவலறையிலே அடைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் கட்டி வைத்தார்கள். ஆனால் பவுலும், சீலாவும் நடுராத்திரியிலேயே ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள். அப். 16;22: எவ்வளவு ஆனந்தம்! எங்களுக்காக இயேசு கிறிஸ்து எவ்வளவு அடிகள் சகித்தார், அவர் நாம மகிமைக்காக, அவரது ராஜ்யம் பூமியில் பரவுவதற்காக எங்களை யாராவது அடிக்கமாட்டார்களா? எங்களை கொலை செய்ய மாட்டார்களா? அப்படியாவது எங்கள் தேவன் மீது நாங்கள் வைத்திருக்கிற அன்பை வெளிப்படுத்துவோமே என்று ஏங்கியது அவர்கள் உள்ளம்!

இயேசு ராஜா சொன்னாரே! "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளை

யும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்லுவார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்."

இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளையே! கர்த்தர் உன்னைக் கொண்டு போகும் பாதையிலே முறுமுறுப்பில்லாமல் உற்சாகத்தோடு நடப்பாயாக! உன்னை சுவிசேஷ ஊழியத்திற்காக கல்வாரிப்பாதையில் அர்ப்பணித்துவிடு! அவருக்காக பாடு அனுபவிப்பதையும் நிந்தை சுமப்பதையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்! மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதைத் தெரிந்து கொள்ளவில்லையா? எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் அல்லவா? (எபி. 11:24, 25)

சீஷர்களுடைய உறுதியும், தீர்மானமும், முடிவும் உன்னைப் பெலப்படுத்தும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

பேதுரு முதிர் வயதுள்ளவனானான். அவன் கைகளை நீட்டிய போது, வேறொருவன் அவன் அரையைக் கட்டி, இஷ்டமில்லாத இடத்துக்குக் கொண்டு போனான். ரோமாபுரியில் நீரோ என்ற மன்னனின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பேதுரு தனக்காக நியமிக்கப்பட்ட சிலுவையைக் கண்டான்; என் நேசராகிய இயேசுவோடு நான் ஒப்பிடத்தக்கவனல்ல! நான் நேராக சிலுவையில் அறையப்பட தகுதியற்றவன்; என்னைத் தலைகீழாக சிலுவையில் அறைவீர்களா?" என்று வேண்டிக் கொண்டான். அவன் வேண்டுகோளை அப்படியே நிறைவேற்றினார்கள்!

எத்தியோப்பியன் தன் தோலை மாற்றக்கூடுமா? என்ற கேள்விக்கு விடையளிக்கும்பொருட்டு, எத்தியோப்பியாவின்

கறுப்பர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தும் பாரத்தோடு மத்தேயு எத்தியோப்பியா தேசத்திற்கு கடந்து வந்தார். இயேசுவின் அன்பை விவரித்தார்! அந்த கறுப்பர்களின் மேன்மையை விரும்பிய அவர், அவர்களை இயேசுவினிடம் வழி நடத்தும் பொருட்டு தமது தலையை மூலதனமாக வைத்தார். பட்டயத்தால் வெட்டப்பட்டு சிரத்சேதம் பண்ணப்பட்டார்.

வெங்காயத்தின் தோல் உரிப்பது எளிது உருளைக் கிழங்கின் தோலை அவித்த பின் தான் உரிப்பார்கள். ஆனால் பர்த்தலமேயு என்ற இயேசுவின் சீஷனது தோலை உயிரோடு உரித்தனர்! மரத்திலிருந்து நார் கிழிக்கப்படுவதை போல, அவனது சதையிலிருந்து தோலைப் பிரித்தனர்! துருக்கி தேசத்திலே தனது இரத்தத்தை சிந்தி துடித்து துடித்து இறந்தார். இவர் இந்தியா தேசத்திற்கு அதற்கு முன்னால் வந்து சிந்து நதி தீரத்தில் சுவிசேஷம் அறிவித்து மத்தேயு எழுதின சுவிசேஷத்தை வினியோகித்ததாக வரலாறு கூறுகிறது.

நாம் பக்கங்களிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்க எவ்வளவு சோம்பல் படுகிறோம்! ஆனால் எப்படித்தான் தோமா அப்போஸ்தலன் இந்தியாவின் தென் கோடிக்கு வந்து சேர்ந்தாரோ தெரியவில்லை! மயிலாப்பூரில் அவர் சரீரத்தை இந்தியன் ஒருவனின் ஈட்டி ருசிபார்த்தது. இரத்தம் கொப்பளித்தது!

மாலை நேரம்! ரோமாபுரி நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது! வீதியெல்லாம் ஜனங்கள் வேடிக்கை பார்க்க நின்று கொண்டிருந்தனர். குதிரைகளால் பூட்டப்பட்ட ஓர் இரதம் வீதியிலே வந்து கொண்டிருந்தது. ஒரு மனிதன் தரையிலே புரண்டு புரண்டு இழுக்கப் பட்டு உருண்டு வந்து கொண்டிருந்தான். ஆம்! அவன் இரதத்தின் பின் கட்டி இழுக்கப்பட்டான். அவனது துணி கிழிந்தது; உடல்

தரையிலே உராய்ந்து காயமேற்பட்டது! சதையெல்லாம் பிய்த்த் துணுக்குகளாக தெருக் கல்லிலே ஒட்டிக் கொண்டன; எலும்புகள் உராய்ந்தன! முகம் சிதைவடைந்தது; யார் அவன்! சுவிசேஷத்தை எழுதிய மாற்கு இவன்தான்; வீதியெல்லாம் வேடிக்கைப் பொருளாகி, தரையிலே தேயுண்டு, சுவிசேஷத்தை விதைத்தவன்!

அந்திரேயாவைக் சிலுவையில் கட்டி வைத்தனர். இரவு பகலாகத் தொங்கிக் கொண்டே கிடந்தார்! அந்த வழியில் செல்லும் மக்களுக்கு, சிலுவையில் வதைக்கப்பட்ட போதும் சுவிசேஷம் அறிவித்தார்! கண்கள் மங்கி நா குழறினாலும், தமது கடமையில் அவர் தவறவில்லை! கொஞ்சம் கொஞ்சமாக வதைத்து வதைத்து ஜீவனைக் கொடுத்தார்!

அப்போஸ்தலனாகிய யோவானின் இறுதி நாட்கள் மர்மமாகவே இருக்கிறது! அவரை லத்தீன் வாசல் எனச் சொல்லப்படும் இடத்தில் கொதிக்கும் எண்ணெயில் தள்ளியதாகவும் ஆனால் எந்த சேதமும் இல்லாமல் அவர் வெளியே வந்தார் என்றும் பாரம்பரியம் சொல்லுகிறது!

ஏரோது யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான் [அப். 12:2]. சின்ன யாக்கோபை தேவாலயத்திலிருந்து கீழேத் தள்ளி அடித்துக் கொன்றனர்! லூக்காவைத் தூக்கிலிட்டனர். சிமியோனைச் சிலுவையில் அறைந்தனர்! யூதாவை அம்புகளால் எய்து கொன்றனர்! பவுலைச் சிரச்சேதம் பண்ணினர். கிறிஸ்தவம் அழிந்ததா? இல்லவே இல்லை! காட்டுத்தீபோல மிகமிக வேகமாக பரவியது!

எவ்வளவுக்கெவ்வளவு கிறிஸ்தவர்கள் கொல்லப் பட்டார்களோ அவ்வளவுக்கவ்வளவு கிறிஸ்தவ மதம் தழைத்தது. நெருக்கப்படும் போது தான் விரிவடையும். ஒரு தேசத்தில் எழுப்புதல் தீபற்றி எரியவேண்டுமானால் கல்வாரிப் பலி பீடத்தில் தங்களை வைக்க முன்வரும் தியாகிகள் எழும்பவேண்டும்!

கர்த்தருடைய சபை செங்கல்லினாலும், சிமெண்டினாலும் கட்டப்படுகிற ஆலயம் அல்ல! அது தியாகத்தாலும், இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் கட்டப்படுவதாகும்! தமது ஜீவனைக் கல்வாரியில் கொடுத்த கிறிஸ்து இதன் மூலைக் கல் ஆனார். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் அஸ்திபாரங்களானார்கள்! அவர்கள்மீது நீ கட்டப்பட வேண்டிய நேரம் வந்தது!

ஆகையால் நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்! [எபேசியர் 2:19-23] எவ்வளவு மேன்மையான பாக்கியம்!

இயேசுராஜா! உமது தியாகத்திற்கும், உமது அப்போஸ்தலர்கள் கடந்துவந்த பாதைக்கும் எங்களைத் தகுதிப்படுத்தும்! நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட எந்தத் தகுதியும் எங்களுக்கு இல்லையே, ஐயா! எங்களை உயிர்ப்பிக்கமாட்டீரா? வல்லமையான ஊழியக்காரராக, உமது சுவிசேஷத்தை வெட்கப்படாமல் சுமக்கிறவர்களாக எங்களை மாற்றுவீராக! உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்ந்து போகவும், எங்கள் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டவும், உமது உயிர்த்தெழுந்த வல்லமையால் பெலப்படுத்தியருளும் எங்கள் தேவனே, நாங்கள் உம்முடையவர்கள்; நீர் எங்களுடையவர்! ஆமென்; ஆமென்!

அத்தியாயம் 16

கடைசியாக, என் சகோதரரே...

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று"

[1 பேதுரு 4:7]

இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றியதான வாக்குத்தத்தங்கள், அனைத்தும் நிறைவேறிவிட்டன! யூதரும் இஸ்ரவேலரும் தங்கள், தங்கள் கூடுகளில் வந்து சேர்கின்றனர்! உலகம் அனைத்திலும் உள்ள பரிசுத்தவான்கள் அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; கம்யூனிஸ்ட் சிறைச்சாலைகளிலுள்ள இரத்த சாட்சிகள் அவரது வருகைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

"அறுப்புக் காலம் சென்றது; கோடைக் காலமும் முடிந்தது. நாமோ இரட்சிக்கப்படவில்லை" என்று எரேமியா தீர்க்கதரிசி புலம்புகிறார்! நரக ஆக்கினைக்குச் செல்லவிருக்கும் மக்களைக் குறித்துப் பரிதபிக்கிறார்! [எரே 8:20]

"இதோ, மாரிகாலம் சென்றது, மழைபெய்து ஒழிந்தது என் பிரியமே, என் ரூபவதியே! நீ எழுந்து வா!" என்று தேவன் தன் மணவாட்டியாகிய சபையைத் துரிதப்படுத்துகிறார்! பூரணத்துக்குள் வழி நடத்துகிறார்! [உன் 2:11,13]

"இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று: ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்"
என்று அப்போஸ்தலனாகிய பவுல், விசுவாசிகளுக்கு எச்சரிப்புக் கொடுக்கிறார்! (ரோம. 13: 11).

வானத்தில் தொனிக்கும் குரல் என்ன? “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது” ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்! கேட்கிறவனும் வா என்பானாக!” (வெளி. 22: 12, 17).

“ஆமென்' கர்த்தராகிய இயேசுவே, வாரும்! உம்மைக் காண, என் கண்களெல்லாம் ஏக்கத்தோடு, வாஞ்சையாய்க் காத்திருக்கின்றன” என்று உன்னால் ஜெபிக்க முடியுமா?

இனி நேரமில்லை! இருதயத்தைக் கிழிப்போம்! அவரது பாதத்தில் ஊற்றுவோம்! அவரது இரத்தத்தால் கழுவப் படுவோம்! எஞ்சியிருக்கும் ஒரு சில வினாடிகளையும் கர்த்தருக்காய்ச் செலவிடுவோம்!

சட்டசபைத் தேர்தல் பிரச்சாரம் செய்யும் கடைசி நாளில் உலகத்தார் எவ்வளவு தீவிரமாக பணியாற்று கின்றனர்! அனல் பறக்கும் பிரச்சாரம் நடக்கும். எங்கும் கொடிகள்! எங்கும் ஒருபெருக்கிகள்! எத்தனை ஜீப்கள்! எத்தனைப் பொதுக்கூட்டங்கள்! ஆ! எவ்வளவு துரிதம்!

சட்டசபைக்காக, மக்கள் இவ்வளவு உழைத்தால், தேவனுடைய பிள்ளைகள் எவ்வளவாக அவரது வருகைக்காக உழைக்க வேண்டும்! இராஜ்ஜியத்தின் நற்செய்தியை சமயம் வாய்த்தாலும் சரி; வாய்க்காவிட்டாலும் சரி, பிரசங்கிப் போம்!

இந்த நாளில் நாம் மௌனமாயிருந்தால் பழி நம்மீது சுமரும்! உலகம் அழிவுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. நாம் வாழும் இந்த உலகத்தைப்போல 4000 உலகங்களை அழிக்கக்கூடிய அளவு, அணு ஆயுதங்களை உலக வல்லரசுகள் செய்து ஆயத்தமாக வைத்திருக்கின்றன!

“பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்புகளையும், திராட்சத்தோட்டங்களையும், ஆடு மாடுகளையும். வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?” [11 இரா. 5: 26].

இயேசு கிறிஸ்துவின் ஆலோசனை என்ன? "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" லூக். (16: 9.)

ஆத்துமாக்களைச் சம்பாதிப்போமா? நரக வேதனையி லிருந்து அவர்களை மீட்போமா?

கடந்த வாழ்க்கையைத் திரும்பிப்பார்க்கும்போது ஏராளமான நாட்களை, வருடங்களை நாம் வீணடித்திருக்கிறோமல்லவா? பரிசுத்தாவியானவரைத் துக்கப்படுத்தியிருக்கிறோமல்லவா? இயேசுவை வேதப்படுத்திருக்கிறோமல்லவா? ஆனால், அவரோ, நமது பாவங்களை எல்லாம் மன்னித்து, அக்கிரமத்தையெல்லாம் நீக்கிப்போட்டு, நோய்களைக் குணமாக்கி, ஆத்துமாவை அழிவிலிருந்துமீட்டு இதுவரை நம்மைப் பாதுகாத்தாரே! கல்லுகளிலும் முள்ளுகளிலும் நடந்து, நடந்து நம்மைத் தேடி வந்தாரே!

அருமையான தேவனுடைய பிள்ளையே, நீ இயேசுவின் கண்ணீரைத் துடைப்பாயா? அவரது தாகத்தைத் தீர்ப்பாயா? அவரது ஊழியத்தை உற்சாகமாக செய்வாயா? அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஒருவனுக்கு இயேசுதான் தெய்வம் என்று புரிந்தது. ஆனால் அவனால் இயேசுவுக்கு ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைக்கவில்லை.

உனக்கு வாய்த்திருக்கிறது! கி ரு பை யா ய் க் கிடைத்த இந்த நாட்களை முழுவதுமாய் பயன்படுத்திக் கொள்! இனி நேரமில்லை! புறப்படு! உன்னைச் சீர்படுத்திக் கொள்; அநேக ஜாதிகளை சிலுவையண்டை கூட்டிச் சேர்த்து விடு! ஜீவ கிரீடத்தைப் பெறுவாய்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

G.B. Sathyanesan. R

மனம்விட்டு உங்களோடே...

இந்த புத்தகத்தின் மூலம் உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தமிழில் போதுமான கிறிஸ்தவ புத்தகங்கள் இல்லையே என்ற பாரத்தை கர்த்தர் என் உள்ளத்தில் வைத்ததால் தீவிரமாக எழுத முற்பட்டேன். அதன் விளைவே, ''கல்வாரிப் பாதையில் நீ'' என்ற இந்தப் புத்தகம்! மட்டுமல்ல; மாதம் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிடும்படி தீர்மானத்திருக்கிறோம். இதுவரை ஐந்து, ஆறு புத்தகங்கள் வெளியாகி விட்டன!

''சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப் படவேண்டும்'' (மாற்கு 13:10) என்று இயேசு கட்டளை கொடுத்தார். விசுவாசிகளைத் தட்டி எழுப்பவும், எழுப்புதலின் அக்கினி செய்திகளைத் தரவும், உத்தமான ஜனத்தை அவரது வருகைக்கு ஆயத்தம் செய்யவும், கர்த்தருடைய பாதத்தில் எங்களை அர்ப்பணித்திருக்கிறோம்.

குமுதம், ஆனந்தவிகடன் போன்ற வார இதழ்களும் மாதம்தோறும் ஒரு நாவல் என்ற திட்டத்தின்கீழ் ஆபாசமான புத்தகங்களும் இலட்சக்கணக்கில் அச்சடித்து வெளியிடப்படுகிறது!

ஆனால் கல்வாரி அன்பைப் பற்றி எழுதத்தான் ஆட்கள் இல்லை! ஆவிக்குறிய புத்தகங்கள் வெளிவருவது மிகவும் அபூர்வமே! மிகவும் முன்னேறிய தமிழக ஊழியர்களில் ஒரு சிலரே, ஒருசில புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இவை போதவே போதாது. இது கடலில் பெருங்காயத்தைக் கரைப்பதுபோல இருக்கிறது! தேவையோ மலையளவு, சந்தித்திருப்பதோ கடுகளவே!

இன்று கம்யூனிஸ்ட்டுகள் உலகத்தின் மூன்றிலொரு பகுதியை விழுங்கியிருப்பதின் இரகசியம் என்ன? எழுத்தின் வேலைதான். கிறிஸ்தவ புத்தகம் ஒன்று வெளியாவதற்குள் அவர்கள் இருநூறு புத்தகங்களை வெளியிட்டு விடுகிறார்கள்! மட்டுமல்ல, சினிமாச் செய்திகள், மாம்ச இச்சையைத் தூண்டிவிடும் மஞ்சள் புத்தகங்கள், நாத்திகக் கொள்கைகள் இன்று பெருகி, மக்களை பாவத்திற்குள்ளே அக்கினிக் கடலுக்குள்ளே வேகமாக இழுத்துச் செல்கின்றன!

இந்த அவல நிலைமாற, கிறிஸ்தவ புத்தகங்களை ஊக்குவியுங்கள். புதிதான ஒரு புத்தகம் வெளியிடப்பட ரூ. 1500/- முதல் ரூ. 2000/- வரை செலவாகும். எந்தத் தலைப்பின் கீழ் புத்தகம் எழுதப்படவேண்டும் என்பதை (எழுப்புதல், சுவிசேஷம், தெய்வீக அன்பு, வருகை போன்ற தலைப்புகள்) குறிப்பிட்டு ஒரு புத்தகம் அச்சிடப்பட தேவையான பணத்தையோ, அல்லது பாதியையோ தந்து உதவுங்கள். உங்கள் உதாரத்துவ உதவியின் மூலம் அவைகளை வெளியிடுவோம். கர்த்தர் நூறத்தனையாய் அதை உங்களுக்குத் திரும்ப தந்து, உங்கள் குடும்பங்களை ஆசீர்வதிப்பார்!

மட்டுமல்ல, இன்னும் யார் யாருக்கு புத்தகங்கள் அனுப்பப்பட வேண்டுமோ, அவர்கள் விலாசங்களையும் உங்கள் பகுதிகளில் புத்தகங்களை ஊக்குவிக்கக் கூடியவர்கள் விலாசங்களையும் சேகரித்து எங்களுக்கு அனுப்புங்கள். முடிந்தால் புத்தகங்களை மொத்தமாக வாங்கியும் விநியோகிக்கலாம். உங்கள் முயற்சிகளின் பலனை கிறிஸ்துவின் வருகையில் கண்டு மகிழ்வீர்கள்!

கையோடு கைகோர்த்து, ஒருமனமுள்ளவர்களாக, நமது தேசத்தை தேவ செய்தியால் நிரப்புவோமாக! இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறபடியால் ஆயத்தப்படுவோம்; ஆயத்தப்படுத்துவோம்; ஆமென்; அல்லேலூயா!

★

கல்வாரிப் பாதை அழைக்கிறது!

உன்னை விசேஷமுள்ளவனாக்குகிறவர் யார்?
இயேசுக் கிறிஸ்து அல்லவோ!

உன்னை விசுவாச வீரனாக்குகிறது எது?
கல்வாரி அல்லவோ!

உன்னை பரிசுத்தமாக்குவது எது?
கிறிஸ்துவின் இரத்தம் தானே!

சிலுவையில் இயேசுவின் முகத்தை தியானித்தவர்கள் கோழைகளாய் வாழ்ந்ததில்லை! கிறிஸ்துவின் பாடு, மரணத்தைக் கண்ட சீஷர்கள் முழுமையாக மாற்றப்பட்டார்கள்; சுவிசேஷ வீரர்களானார்கள்; தைரியமாய் சத்தியத்தை அறிவித்தனர்! "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம்" (அப் 2:32) என்று முழங்கினார்கள்.

கல்வாரிப்பாதை அவர்களுக்கு ஆனந்த பாக்கியமாக இருந்தது! தேவனுடைய பிள்ளையே... உனக்கு...?

• • •

எமது பிற எழுப்புதல் வெளியீடுகள்:-

1. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே! ... ரூ 3/-
2. ஜெயமளிக்கும் கிறிஸ்துவின் இரத்தம் .... ரூ. 3/-
3. ஆயத்தப்படு; ஆயத்தப்படுத்து! ... ரூ. 3/-
4. பலியின் உடன்படிக்கை! ... ரூ 3/-
5. எழுப்புதல் எப்பொழுது? ... ரூ 3/-

மாதம்தோறும் புது புது புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.